# வருடாந்த செயலாற்றுகை அறிக்கை

# 2013

வனசீவராசி வளங்கள் பாதுகாப்பு அமைச்சு
'கொவிஜன மந்திரய',
இல. 80/5, ரஜமல்வத்தை ஒழுங்கை,
பத்தரமுல்லை.



## மகிந்த சிந்தனைத் தூரநோக்கு ...

- கடந்த பல தசாப்தங்களாக நிலவி வந்த முறைசாரா அபிவிருத்தி மற்றும் பயங்கரவாதம் ஆகியவற்றின் காரணமாக எமது தேசிய வனப்பூங்காக்கள் அழிந்து போனதால் காட்டு யானைகள் கிராமங்களுக்குள் புகுந்து யானை – மனிதன் என்ற பிரச்சினையைத் தோற்றுவித்தன. இதற்கு ஒரு பரிகாரமாக 2009 ஆம் ஆண்டில் 'கஜமித்துரோ' என்ற நிகழ்ச்சித்திட்டத்தை நடைமுறைப்படுத்தினேன். அதனால் யானைகள் கட்டுப்பாட்டுப் பிரிவுகள் மற்றும் யானைகளுக்கான வேலிகள் அமைத்தல் முதலிய செயற்பாடுகள் துரிதப்படுத்தப்பட்டன. கடந்த இரண்டு வருடங்களுள் மாத்திரம் 600 கிலோ மீற்றர் நீளமான மின்சார வேலிகளை நிர்மாணித்து நவீனமயப்படுத்தும் நடவடிக்கைகளை மேற்கொண்டேன். வட கிழக்குப் பிரதேசங்கள் அடங்கலாக இந்தப் பிரச்சினைக்கு முகம்கொடுக்கின்ற சகல கிராமங்களிலும் மின்சார வேலிகள் அமைக்கும் பணிகளை எதிர்வரும் மூன்று வருட காலத்திற்குள் நிறைவு செய்வேன்.

- பயங்கரவாதத்தினால் அழிந்து போன வில்பத்து, குமண, யான்ஓயா, சுண்டிக்குளம் போன்ற சகல சரணாலயங்களையும் நவீனமயப்படுத்தி எதிர்வரும் ஆண்டுகளில் திறந்து வைப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன்.

## கௌரவ அமைச்சரின் ஆசிச் செய்தி . . .



**வனசீவராசி வளங்கள் பாதுகாப்பு அமைச்சராக நான் பதவியேற்று ஓராண்டின் பின்னர் இவ் அமைச்சின் செயலாற்றுகை அறிக்கைக்கு முன்னுரை வழங்கக் கிடைத்தமையையிட்டு நான் பெரிதும் அகமகிழ்கின்றேன்.**

அதிமேதகு சனாதிபதி அவர்களின் மஹிந்த சிந்தனை தொலைநோக்கின் கீழ் அமைச்சின் ஒரு மூலையில் தொங்கிக் கொண்டிருந்த பாரிய நிறுவனம் ஒன்றாகிய வனசீவராசி பாதுகாப்பு அமைச்சை தனியாதொரு அமைச்சாகவும், அதற்குரிய அமைச்சராக முதன்முதலில் என்னை நியமித்தமை தொடர்பாக என் முதற்கண் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

மேலும், பல்லின உயிர் வகைமை உடன்பாடுகளின் மூலம் அரசாங்கத்துக்கும் மக்களுக்கும் கிடைக்க வேண்டிய உரிய பங்குகளை வழங்கி, சமநிலைசார் சுற்றாடல் முறைமையொன்றைத் தயாரிக்கும் பொறுப்பு என்னிடம் நம்பிக்கையுடன் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அதனை முதனிலைப்படுத்தி அதிமேதகு சனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்களின் மஹிந்த சிந்தனையுடன் இணைந்து செயற்படுகின்ற இவ் அமைச்சின் **செயலாளர், பணிப்பாளர் நாயகம் உட்பட அமைச்சின் அலுவலர்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள், அரசாங்க அதிபர்கள், உப அரசாங்க அதிபர்கள் மற்றும் பொது மக்கள் ஆகிய அனைவரும் ஒருங்கிணைந்து தத்தமது பங்களிப்புக்களை நல்கினர்.**

யானை மனிதன் மோதலுக்கு வித்திட்ட காரணிகளை ஆராய்ந்து, அவற்றிற்கான உறுதியான தீர்மானங்கள் எட்டப்படல் வேண்டும். அவ்வாறே அழிவின் விளிம்பில் சென்று கொண்டிருக்கும் விலங்கினங்களையும், நீரியல் உயிரினங்களையும் பாதுகாப்பதற்கான விசேட ஆலோசனைகளையும், இது தொடர்பாக வெளிநாடுகளின் நிபுணத்துவ அறிவையும் பெற்றுக்கொள்வதற்கு இவ் ஆண்டினுள் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அது தொடர்பாக இலங்கையைச் சேர்ந்த முதலாவது நிபுணரான பேராசிரியர் சரத் கொடகம அவர்களை விசேட ஆலோசகராக நியமித்து, அன்னாரது நிபுணத்துவ அறிவின் அடிப்படையில் வனசீவராசிகள் சட்டத்தை காலத்திற்கு ஏற்ற வகையில் மறுசீரமைப்பதற்கு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

இலங்கையில் முகங்கொடுக்க நேர்ந்துள்ள சுற்றாடல் பிரச்சினைகள் வனசீவராசிகளின் பாதுகாப்புக்குப் பெரும் தடையாக அமைந்துள்ளமை கண்டறியப்பட்டுள்ளன. சுற்றாடல் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு நீண்டகால மற்றும் குறுகியகால நடவடிக்கைகளை முன்னெடுக்கும் போது, அத்தியாவசிய பணியாக கருதப்பட்ட சில பிரச்சினைகள் பிரித்து இனங்காணப்பட்டுள்ளன. காடுகளை அழித்தல், காற்று, நீர், மண் மாசடைதல், கரையோரம் மாசடைதல், நீரியல் வளங்கள் அழிவடைதல் எனும் காரணிகள் வனசீவராசிகளின் பாதுகாப்புக்கு பெரும் அச்சுறுத்தலாக அமைந்துள்ளன. விலங்குகளின் பாதுகாப்பு தொடர்பாக சுற்றாடல் அமைச்சுடன் ஒன்றிணைந்து செயற்பாட்டு நிகழ்ச்சித் திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன. வனாந்தரங்கள் அழிவடையும் போது வனசீவராசிகளை பாதுகாப்பதற்கு மேற்கொள்ளப்பட்டுள்ள தீர்மானங்கள் விசேடமானவையாகும்.

1899 ஆம் ஆண்டில் வனவளத் திணைக்களத்தின் தலைவரான திரு. ஏ. எஃப். ப்ரவ்ன் அவர்கள் தமது குறிப்புக்களில், இவ்வாறு பதிவு செய்துள்ளார்.

> *" இந்நாட்டின் மொத்தச் சதுர மைல்கள் 25,365 ஆகும். அதில் 20,000 சதுர மைல்களுக்கு அதிகமானவை காடுகளால் சூழப்பட்டுள்ளன. அவ்வாறு காடுகளால் சூழப்பட்டுள்ளவற்றில் பயன்பாட்டுக்குகந்த வனாந்தரங்கள் சிறியளவிலே உள்ளன. எஞ்சியுள்ளவற்றில் பெரும்பாலானவை மரங்கள் அருகிய புல்வெளிகளும், பற்றைக் காடுகளுமே ஆகும்."*

அன்று அவ்வாறு வனாந்தரங்களால் சூழப்பட்டிருந்த நாடு தற்போது வனாந்தரங்களை அமைக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது. 1900 களில் எமது நாட்டில் 70% ஆனவை வனாந்தரங்களால் சூழப்பட்டிருந்ததன. அது 1963 ஆம் ஆண்டளவில் 44 % வரையும், 1985 ஆம் ஆண்டளவில் 23 % வரையும், 1990 ஆம் ஆண்டளவில் 21 % வரையும் துரித கதியில் குறைந்துகொண்டே செல்கின்ற நிலை காணப்படுகின்றது. 1960 ஆம் ஆண்டில் இருந்து 1990 வரையிலான மூன்று தசாப்பதங்களில் மாத்திரம் பத்து இலட்சம் ஹெக்ரயார் இயற்கை வனாந்தரங்கள் அழிந்துள்ளன. இதற்கான பிரதான காரணிகளாக மூன்று விடயங்கள் கண்டறியப்பட்டுள்ளன. சனத்தொகை அதிகரிப்பு காரணமாக புதிய குடியேற்றங்களின் உருவாக்கம், அபிவிருத்திச் செயற்திட்டங்கள் காரணமாக காடுகளை சுத்தப்படுத்தல், வலுசக்திக்காக வெட்டுமரங்களைப் பெற்றுக்கொள்ளல், கட்டட நிர்மாணிப்புத் துறைகளுக்கு மரக்குற்றிகளைப் பெற்றுக்கொள்ளல் ஆகியவற்றினால் வனவிலங்குகள் அழிந்துபோயுள்ளன.

வனாந்தரங்கள் அழிக்கப்படுவதன் காரணமாக, பாரிய இயற்கை அனர்த்தங்களுக்கு முகங் கொடுக்க வேண்டிய நிலைக்கு இன்று நாம் தள்ளப்பட்டுள்ளோம். அதாவது, மண் கழுவுண்டு போதல், மண் அரிப்பு, வெள்ளப் பெருக்கு, வளிமண்டல வெப்பம் அதிகரிப்பு, பாரிய வரட்சி, நீர் ஊற்றுக்கள் அழிவடைதல், வனவிலங்குகளின் வாசஸ்தலங்கள் அழிக்கப்படுவதன் காரணமாக மனிதர்களுடனான மோதல் ஆகியன குறிப்பிடத்தக்கனவாகும்.

வனவிலங்குகளின் பாதுகாப்பு சம்பந்தமாக நடைமுறையாக பல சட்டங்கள் உள்ள போதிலும், அவை காலத்திற்கு ஏற்றவாறாக வனசீவராசி வளங்களைப் பாதுகாக்கக் கூடிய வகையில் நேரொத்த திருத்தங்களுக்கு உட்படுத்தப்பட்டுள்ளன.

- 1907 " வனாந்தர கட்டளைச் சட்டம்"
- 1924 இல் இணக்கப்பாடு காணப்பட்ட " இளந்தாவரங்களைப் பாதுகாக்கும் கட்டளைச் சட்டம்"
- 1947 இல் இணக்கப்பாடு காணப்பட்ட " அரசாங்க காணிகள் தொடர்பான கட்டளைச் சட்டம்"
- 1951 இல் இணக்கப்பாடு காணப்பட்ட இல. 25 ஐக் கொண்ட " மண் பாதுகாப்பும் சட்டம்"
- 1964 இல் இணக்கப்பாடு காணப்பட்ட இல. 44 ஐக் கொண்ட " வனவிலங்குகளினதும், தாவரங்களினதும் பாதுகாப்புச் சட்டத்தின்" மூலம் தேசிய விலங்குகளைப் பாதுகாத்தலும், அவற்றின் இறைச்சி, தோல் என்பன உள்நாட்டிலும், வெளிநாடுகளுக்கும் விற்பனை செய்வது தடைசெய்யப்பட்டு உள்ளது.. இலங்கையின் சுதந்திரக் கட்சியினால் முன்மொழியப்பட்ட இச் சட்டம் வனவிலங்குகளின் பாதுகாப்புக்கு உத்தரவாதமளிக்கின்றது. ஆதலால், வனசீவராசி வளங்கள் அனைத்தையும் பாதுகாப்பதற்கான சட்டம் ஒன்றைத் தயாரிக்கவேண்டியது மிகப் பிரதானமாகும்.

இலங்கையில் வனசீவராசிகள் சுற்றுலா விடுதிகள் மற்றும் அதன் முகாம்களை இணைத்தளத்தின் ஊடாக ஒதுக்கிக் கொள்ள முடிந்துள்ளமையானது நாம் அடைந்த இன்னுமொரு பாரிய வெற்றியாகும். அது தகவல் தொழிநுட்ப முன்னேற்றத்தின் காரணமாகவே கைகூடியது எனலாம்.

இவ் அமைச்சின் முகாம்களை ஒதுக்கிக்கொள்வதற்கான கொடுப்பனவுகளை நிதியாகவோ, கடனட்டை மூலமாகவோ, கையடக்கத் தொலைபேசி ஊடாகவோ மேற்கொள்ள முடியும்.

ஈ – சேவை மூலம் முகாம்களை ஒதுக்கிக் கொள்ள முடிந்துள்ளமையானது வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளுக்கு பெரும் வரப்பிரசாதமாகும். உள்நாட்டு சுற்றுலாப்பயணிகளுக்கும், தலைநகருக்கு வந்துசெல்லக்கூடிய அசெகளகரிய நிலை தவிர்க்கப்படுகின்றது. சிலவேளை முகாம்களை ஒதுக்கிக் கொள்வதற்குச் செலவாகும் தொகையை விட அதனை ஒதுக்குவதற்கான வந்துசெல்லும் பிரயாணத்திற்கு அதிக தொகை செலவாகும். அத்துடன் அலைச்சல் மற்றும் ஒதுக்கிக் கொள்ள முடியாமற்போகும் சந்தர்ப்பத்தில் ஏற்படும் மனஉளைச்சல் என்பன தவிர்க்கப்படுகின்றன. இன்றேல் அது செயற்திட்டத்திற்கும் பாதிப்பாக அமையக்கூடும்.

44 வனசீவராசிகள் சுற்றுலா விடுதிகள் மற்றும் முகாம்கள் உள்ளதுடன், அதனை பார்வையிடுவதற்கு வருகின்ற உள்நாட்டு, வெளிநாட்டு சுற்றுலாப் பிரயாணிகள் 12 இலட்சத்தையும் தாண்டியுள்ளனர். இத்திட்டத்தின் மூலம் சுற்றுலாச் சேவை தற்போது இருமடங்காக அதிக்கரிக்கக் கூடிய வாய்ப்புக் காணப்படுகின்றமை புலனாகின்றது.

எமது அமைச்சின் தாரக மந்திரம், “ மனிதன் சுற்றாடலைப் பேணிப் பாதுகாக்கும் போது, சுற்றாடலும் மனிதனைக் காத்துநிற்கும்” என்பதாகும். .

இச் செயன்முறையின் முக்கியத்துவம் என்னவெனில், அரசாங்க அலுவலகங்களின் வேலை நாட்களுக்கு மட்டும் வரையறுக்கப்படாது, அவரவர்களுக்கு இல்லங்களில் இருந்தவாறே சனி, ஞாயிறு தினங்களில் கூட தமது தேவைகளை இலகுவாகவும், துரிதமாகவும், முழுமையாகவும் பூர்த்தி செய்துகொள்ள முடிகின்றன. இதனை ஈ - பிஸ்னஸ், ஈ – கொமர்ஸ் ஆகிய பிரிவுகளுக்கும் விஸ்தரிக்க முடியும். அவ்வாறே உலகில் இன்று மிக முன்னேற்றமடைந்துள்ள ‘எப்ஸ் – ஒன் – டெப்’ (APPS- ON - TAP) திட்டத்தின் துணையுடன் மோசடிகளையும் தவிர்த்துக் கொள்ள முடிகின்றது.க

ஆமைகளின் பாதுகாப்பு மற்றும் வல்லாப்பட்டை தாவர மோசடி மற்றும் மீனினம், முதலை பல்லி உள்ளிட்ட உயிரின மோசடிகளையும் தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன.

யானை மனிதன் மோதலை குறைப்பதற்கு 2014 வரவு செலவுத் திட்டத்தினால் அதிக நிதி ஒதுக்கிடப்பட்டுள்ளதுடன், அரசாங்க அதிபர்கள் மற்றும் உப அரசாங்க அதிபர்கள் ஊடாக அவை நிறைவேற்றப்படுவதனால் மக்களுக்கான சேவைகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளன.

**காமினி விஜித் விஜயமுனி சொய்ஸா**
**வனசீவராசி வளங்கள் பாதுகாப்பு அமைச்சர்**

# செயலாளரின் வாழ்த்துச் செய்தி . . .



சுதந்திரத்துக்குப் பின்னர் இலங்கையில் முதன்முதலாக வனசிவராசி வளங்கள் எனும் அமைச்சு ஒன்றைத் தாபிப்பதற்கு அதிமேதகு சனாதிபதி அவர்கள் எடுத்த இத் தீர்மானம் வரவேற்கத்தக்க காலோசிதமான ஒரு நடவடிக்கையாக இனங்காணப்பட்டுள்ளது. இவ் அமைச்சின் முதலாவது செயலாளராக பணியாற்றக் கிடைத்தமையை பெரும்பாக்கியமாக நான் கருதுகின்றேன். புதிய அமைச்சு தாபிக்கப்பட்டு ஓராண்டின் நிறைவில் பிரசுரிக்கப்படும் இச் செயலாற்றுகை அறிக்கைக்கு ஒரு வாழ்த்துச் செய்தியை வழங்குவதில் நான் பெருமிதமடைகின்றேன்.

1937 இல் பிரகடனப்படுத்தப்பட்ட வனவிலங்கு மற்றும் தாவரங்களை பாதுகாத்தல் கட்டளைச் சட்டம் மற்றும் அதன் திருத்தங்களுக்கு அமைய தமது உரிமைகளுக்காக குரலெழுப்ப முடியாத விலங்கினங்களினதும், உயிருள்ள உயிரற்ற அனைத்து இயற்கை வளங்கள் தொடர்பாகவும் பாதுகாப்பளிக்கும் பொறுப்பினை நிறைவேற்றுகின்ற, வனசீவராசிகளின் மரபுரிமைகளை எதிர்கால சந்த்தியினருக்காக பேணிப்பாதுகாப்பதை நோக்காகக் கொண்டு அமைச்சின் கீழ் இயங்குகின்ற வனசிவராசிகள் திணைக்களத்தினால் பாரிய செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன. இப் பணிகளை நிறைவேற்றும் பொருட்டு 2013 ஆம் ஆண்டில் அபிவிருத்தி செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்தவென ரூபா 643 மில்லியன் திணைக்களத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ளது. இவ் ஒதுக்கீடுகளின் கீழ் மின்வேலி அமைத்தல், ஹொரவபொத்தானை, லுணுகம்வெஹர காட்டு யானை தடுப்பு முகாம்களை அமைத்தல், தெயட்ட கிருல தேசிய கண்காட்சிக்கு இணையாக தேசிய வனப்பூங்காக்களில் சுற்றாடல் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், அபயபூமியில் வசிக்கின்ற வனவிலங்குகளின் பாதுகாப்பை உறுதிசெய்வது மட்டுமன்றி அருகி வருகின்ற விலங்கினங்களை பாதுகாப்பது தொடர்பாகவும் பாதுகாப்பு வலையமைப்பு ஒன்றைத் தாபிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தேசிய வனப்பூங்காக்களுக்கு வருகை தருகின்ற உள்நாட்டு, வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை ஒவ்வொரு நாளும் அதிகரித்த வண்ணமே உள்ளன. அதனால் உட்கட்மைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. சுற்றுலா விடுதிகளை மேம்படுத்துவதற்கும், புதிதாக சுற்றுலா விடுதிகளை நிர்மாணிப்பதற்கும், தேசிய வனப்பூங்காக்களின் உட்கட்மைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன. நாட்டில் சமாதானத்தை நிலைநிறுத்தி, தேசிய வனப்பூங்காக்களின் வசதிகளை விருத்தி செய்ததன் ஊடாக தேசிய வனப்பூங்காக்களின் வருமானம் அதிகரித்துள்ளதுடன் அதனூடாக தேசிய வருமானத்திற்கு பங்களிப்புச் செய்யவும் முடிந்துள்ளது.

அமைச்சின் கீழ் இயங்குகின்ற வனசிவராசிகள் பொறுப்பின் ஊடாக பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்கள் முன்னெடுக்கப்படுவதுடன், இயற்கை அள்ளி வழங்கிய உரிமைகளை எதிர்கால சந்த்தியினருக்குப் பேணிப் பாதுகாப்பதை நோக்காகக் கொண்டு பாடசாலை கல்வி நிகழ்ச்சித் திட்டங்களை மேற்கொள்ளல், பாதுகாப்பு வலையங்களில் ஒழுங்கமைப்பு சக்தியை மேம்படுத்தல் மற்றும் சுற்றாடல் சட்டங்களை பிரபல்யப்படுத்தல் ஆகிய பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன.

மஹிந்த சிந்தனைத் தூரநோக்குக்கமைய மரஞ்செடிகொடிகளும், விலங்கினங்களும் இணைந்ததான நீடுநிலைத்த அபிவிருத்தியை நோக்கி வீறுநடைபோடும் இவ்வேளையில், எனது உயரிய பங்களிப்பினை வழங்குவதுடன், அமைச்சின் பணிகளை வெற்றிகரமாக முன்னெடுப்பதில் எப்பொழுதும் ஆலோசனைகளை வழங்கி வழிகாட்டுகின்ற வனசீவராசி வளங்கள் பாதுகாப்பு அமைச்சர் காமினி விஜித் விஜயமுனி சொய்சா அவர்கட்கு எனது மனமார்ந்த நன்றியையும் தெரிவித்துக்கொள்கின்றேன். இந்த அறிக்கையைத் தயாரிக்கும் பணியில் ஈடுபட்ட அலுவலர்களுக்கும், அதே நேரம் தகவல்கள் மற்றும் தரவுகள் என்பவற்றை வழங்கிய அலுவலர்களுக்கும், மொழிபெயர்ப்பு பணியை மேற்கொண்ட அலுவலர்களுக்கும் எனது நன்றிகள் உரித்தாகட்டும்.

**பொறியியலாளர் உதேனி விக்ரமசிங்க**

**செயலாளர்**

# உள்ளடக்கம்


வனசீவராசி வளங்கள் பாதுகாப்பு அமைச்சு 13

நிர்வாகப் பிரிவு 15

திட்டமிடல் பிரிவு 20

அபிவிருத்திப் பிரிவு 22

கணக்குப் பிரிவு 25

உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு 27

சட்டப் பிரிவு 29

வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம் 31

இலங்கை வனசீவராசிகள் பொறுப்பு 47

# வனசீவராசி வளங்கள் பாதுகாப்பு அமைச்சு

## தொலைநோக்கு

**“பல்லுயிர்த்தன்மை மற்றும் வனசீவராசிகளின் உரிமைகளைப் பாதுகாக்கும் தேசமொன்றைத் தோற்றுவித்தல்”**

## பணிநோக்கு

“விளைதிறனுடைய வனசீவராசிகள் பாதுகாப்பு வலையமைப்பொன்றை பேணுவதனூடாக, சிறந்த சகவாழ்வுடன் அனைத்து கால்நடைகளும் மனிதர்களும் வாழ்வதற்கு அவகாசமளித்தல்”

### பிரதான பணிகள்

- 1937 இல. 02 ஐக் கொண்ட வனசீவராசிகள், தாவரங்கள் பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தை நடைமுறைப்படுத்தல்.

- சர்வதேச வனசீவராசிகள் சமவாயத்தை நடைமுறைப்படுத்தல்.


- வனசீவராசிகளின் உரிமைகள் மற்றும் பல்லுயிர்த்ன்மையை பேணக்கூடிய வகையில் மனிதர்களுக்கும் ஏனைய அனைத்து சீவராசிகளுக்கும் வாழ்வுரிமையை பேணுவதற்காக கொள்கைகளைத் தயாரித்தலும் அவற்றைச் செயற்படுத்தலும்

- தேசிய பூங்கா அபிவிருத்தியின் மூலம் சுற்றாடல் சுற்றுலா தொழிலை விருத்தி செய்துகொள்ளும் பொருட்டு பங்களிப்பு நல்குதல்

- ஆண்டின் செயலாற்றுகை திட்டத்தில் அடங்கியுள்ள விடயங்களை மாதாந்தம், காலாண்டு, வருடாந்தம் மதிப்பிடுதல், செயற்படுத்துதல் மற்றும் கண்காணித்தல்.

- வனசீவராசிகள் பொறுப்பு மற்றும் வனசீவராசிகளின் பாதுகாப்பு நிதியம் சம்பந்தமான பணிகளை செயற்படுத்தல் மற்றும் கண்காணித்தல்

**அமைச்சின் கீழ் இயங்குகின்ற திணைக்களங்களும் நிறுவனங்களும்**



# நிர்வாகப் பிரிவு

## அறிமுகம்

நிர்வாகப் பிரிவின் கீழ் அமைச்சு, வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம், இலங்கை வனசீவராசிகள் பொறுப்பு ஆகிய நிறுவகங்களின் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

## பணிப்பொறுப்புக்கள்

- அமைச்சினது பொது நிர்வாகம் மற்றும் ஒழுக்காற்று நடவடிக்கைகளை பேணல்
- அபிவிருத்தி, நிதி, கணக்காய்வு, திட்டமிடல், சட்டம் ஆகிய பிரிவுகளுக்கிடையே ஒருங்கிணைப்புடன் மனிதவள மற்றும் பௌதீக வளங்களின் நிர்வாகத்தை பேணல்.
- அமைச்சின் கீழ் இயங்குகின்ற வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம், இலங்கை வனசீவராசிகள் பொறுப்பு ஆகிய நிறுவனங்களின் நிர்வாகம் மற்றும் மனிதவள முகாமைத்துவ பணிகளை மேற்கொள்ளல்

## 2013.12.31 ஆந் திகதிக்கான மேம்பாடு

- 2013.12.31 ஆந் திகதி சம்பள ஆண்டேற்றம் பெறுவதற்கு உரித்தான 46 அலுவலர் களுக்கு சம்பள ஆண்டேற்றம் செலுத்தப்பட்டுள்ளது.
- 2013.12.24 ஆந் திகதி அலுவலகப் பணியாளர் சேவையின் III வகுப்பைச் சேர்ந்த அலுவலகப் பணியாளர்களுக்கு வினைத்திறன்காண் தடைப் பரீட்சை நடாத்தப்பட்டது.
- நிர்வாகப் பிரிவிற்கு கிடைக்கப் பெறுகின்ற அனைத்து பதிவுத் தபாலிடப்பட்ட மற்றும் சாதாரண கடிதங்கள் என்பன தாமதமின்றி அலுவலகத்திற்கு வழங்கப்பட்டுள்ளதுடன், நிறுவனங்களிடையேயும் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன.
- 15 பதவிநிலை அலுவலர்களின் தொலைபேசிகள் ( செல்லிடத் தொலைபேசி, நிலையான, வீட்டு ) பற்றுச்சீட்டுக்கள் மற்றும் பொது தொலைபேசி ஆகிய இரண்டினதும் பற்றுச்சீட்டுக்கள் செலுத்தப்பட்டுள்ளன.
- அமைச்சரின் ஆளணியினரின் தொலைபேசிகள் ( செல்லிடத் தொலைபேசி, நிலையான, வீட்டு ) 30 இற்கான கொடுப்பனவுகள் செலுத்தப்பட்டுள்ளன.
- அலுவலர்களின் விடுமுறை விபரங்கள் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. ( பிரதியொன்று பிரத்தியேகக் கோவைக்கு உட்படுத்தப்பட்டு உள்ளது. )
- 12 அமைச்சரவை விஞ்ஞாபனங்கள் அமைச்சரவையின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.
- 2013 ஆண்டில் 05 வனதிவி செரிய பத்திரிகை இணைப்பிதழ்கள் அச்சிடல் தொடர்பாக குறித்த நிறுவனத்துடன் இணைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.
- வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் ஆட்சேர்ப்பு நடைமுறைகள் 14 இல் 09 தொடர்பாக பொதுச்சேவை ஆணைக்குழுவின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.
- வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் உள்ளகக் கணக்காள்வாளர் பதவி 01, கட்டடக் கலைஞர் சேவையின் III /II பதவி 01 மற்றும் சாரதி பதவிகள் 08 ஆகியன தொடர்பாக அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.
- புதிய ஆட்சேர்ப்பு நடைமுறைகளின் பிரகாரம் பயிற்சிக் காலப் பகுதியினுள் வனசீவராசிகள் பொறுப்பாளர்கள் மற்றும் வனசீவராசிகள் வனப்பரிபாலன அலுவலர்கள் தொடர்பான கொடுப்பனவுகளை வழங்குவதற்கு தாபன பணிப்பாளர் நாயகத்தின் அனுமதி பெற்றுக் கொள்ளப்பட்டது.
- வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தில் உதவிப் பணிப்பாளராக கடமையாற்றிய திரு. பீ. வி. ஜயரத்ன அவர்கள் பிரதிப் பணிப்பாளராக ( திணைக்கள ) பதவியுயர்வு பெறுவது தொடர்பாக பொதுச்சேவை ஆணைக்குழுவின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டது..

## மனித வளங்களின் அபிவிருத்தி தொடர்பாக வழங்கப்பட்ட பயிற்சிகள்

பயிற்சி மற்றும் திறன் விருத்தி தொடர்பாக 2013 ஆம் ஆண்டில் அனுமதிக்கப்பட்ட ஏற்பாடு பத்து இலட்சம் ரூபா (ரூ. 1,000,000.00) ஆக இருந்தது. அந்த வரையறுக்கப்பட்ட ஒதுக்கீட்டின் கீழ் 2013 ஆம் ஆண்டினுள் மனித வளங்களை அபிவிருத்தி செய்யும் நிமித்தம் அலுவலர்கள் பல பயிற்சிப் பாடநெறிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். இங்கு அலுவலர்களின் செயலாற்றுகை மற்றும் விளனத்திறன் ஆகியவற்றை மேம்படுத்துவதற்குத் தேவையான பயிற்சித் தேவைப்பாடுகளை இனங்கண்டு அதற்கிணங்க தேவையான பயிற்சிகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

| பயிற்சி | பயிற்சியை வழங்கிய நிறுவனம் | பங்கு பற்றிய அலுவலர்கள் எண்ணிக்கை | பயிற்சிக் கட்டணம் (ரூ.) |
|---|---|---|---|
| 1. மொழி ஆற்றல் விருத்திப் பாடநெறி (சிங்களம்) | அரச கருமொழிகள் திணைக்களம் | 01 | 8000.00 |
| 2. அரசதுறை கணக்கீட்டு நியமங்கள் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டம் | இலங்கை அரசாங்க நிதி மற்றும் கணக்குகள் தொடர்பான சங்கம் | 01 | 500.00 |
| 3.அரசாங்க சம்பள முகாமைத்துவ முறை (Payroll) | நிதிசார் கற்கை நிலையம் | 02 | 24000.00 |
| 4. கணக்கீடு தொடர்பான பயிற்சி (Cigas) | நிதிசார் கற்கை நிலையம் | 02 | 24000.00 |
| 5. ஆய்வுச் செயன்முறை தொடர்பான சான்றிதழ் பாடநெறி | உள்ளூராட்சி தொடர்பான இலங்கை மன்றக் கல்லூரி | 03 | 45000.00 |
| 6. ஒழுக்காற்று நடைமுறை பற்றி அரச துறை நிறுவனங்களின் அலுவலர் களுக்கு அறிவூட்டல் தொடர்பான மூன்று நாள் நிகழ்ச்சித்திட்டம் | தேசிய ஊழியர் கல்வி நிறுவகம் | 04 | 30000.00 |
| 7. அரசாங்க பெறுகை நடைமுறை | திறன் விருத்தி மன்றம் | 03 | 24000.00 |
| 8. சாரதிகள் மற்றும் சிற்றூழியர் களின் எண்ணக்கரு விருத்தி, ஊக்குவிப்பு தொடர்பான பயிற்சி | திறன் விருத்தி மன்றம் | 06 | 27000.00 |
| 9.அலுவலக முகாமைத்துவம் மற்றும் அலுவலக நடைமுறை தொடர்பான இரு நாள் செயலமர்வு | திறன் விருத்தி மன்றம் | 08 | 64000.00 |

| பயிற்சி | பயிற்சியை வழங்கிய நிறுவனம் | பங்குபற்றிய அலுவலர்கள் எண்ணிக்கை | பயிற்சிக் கட்டணம் (ரூ.) |
|---|---|---|---|
| 10. **மனிதவள முகமைத்துவம் தொடர்பான பட்டப்பின் பட்டம்** | **கொழும்பு பல்கலைக்கழகம்** | 01 | 112500.00 |
| 11. மதிப்பீடு தொடர்பான பயிற்சித் நிகழ்ச்சித் திட்டம் | இலங்கை மதிப்பீட்டு நிறுவகம் | 01 | 18000.00 |
| 12. ஒழுக்கவியல் நடைமுறை | திறன் விருத்தி மன்றம் | 01 | 8000.00 |
| 13. **புதிதாக இணைந்த பட்டதாரிகள், முகாமைத்துவ சேவை அலுவலர்கள் தொடர்பான அலுவலக முகாமைத்துவ பயிற்சி** | **அமைச்சில்** | 20 | 16210.00 |
| 14. **அலுவலக உதவியாளர் சேவையின் அலுவலக முன்னேற்ற பயிற்சி** | **அமைச்சில்** | 09 | 4900.00 |
| 15. வெளிக்கள பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் | ரன்தெனிகல பயிற்சி நிலையம் | 40 | 368262.50 |
| 16. அரசாங்க வளங்களை அப்புறப்படுத்தும் செயன்முறை | திறன் விருத்தி மன்றம் | 02 | 9000.00 |
| 17. பிரத்தியேக கோவை பேணல் | திறன் விருத்தி மன்றம் | 02 | 9000.00 |
| 18. சம்பள சீராக்கம் தொடர்பான பயிற்சி | திறன் விருத்தி மன்றம் | 02 | 10000.00 |
| 19.வாழ்கைத்திறன் மேம்பாட்டு நுட்பங்கள் மற்றும் மன அழுத்தம் தொடர்பான முகாமைத்துவப் பயிற்சி | திறன் விருத்தி மன்றம் | 04 | 18000.00 |
| 20. நம்பத்தகு முகாமைத்துவம் மற்றும் தலைமைத்துவப் பயிற்சி | திறன் விருத்தி மன்றம் | 01 | 8000.00 |
| 21. சாரதிகள்,சிற்றூழியர்களின் திறன் விருத்தி | திறன் விருத்தி மன்றம் | 01 | 4500.00 |
| 22.பெறுமதி சேர் வரி, மதிப்பீடு, பகுப்பாய்வு சம்பந்மாபன பயிற்சி | திறன் விருத்தி மன்றம் | 01 | 8000.00 |
| 23. கேள்விகோரல் மதிப்பீடு | திறன் விருத்தி மன்றம் | 01 | 8000.00 |

| பயிற்சி | பயிற்சியை வழங்கிய நிறுவனம் | பங்குபற்றிய அலுவலர்கள் எண்ணிக்கை | பயிற்சிக் கட்டணம் (ரூ.) |
|---|---|---|---|
| 24. ஆங்கிலச் சான்றிதழ் பாடநெறி | திறன் விருத்தி மன்றம் | 04 | 40000.00 |
| 25. நல்லாட்சி மற்றும் தலைமைத்துவம் தொடர்பான தேசிய செயலமர்வு | இலங்கை மன்றக் கல்லாரி | 03 | 10500.00 |
| 26. சிறந்த ஒழுங்மைப்பு மற்றும் முறைசார் கொள்வனவு | நிர்மாணப் இயந்திரப் பொறிமுறை பயிற்சி நிலையம் | 02 | 6000.00 |
| 27. ஒப்பந்தம் வழங்கல், கோவைகளின் பராமரிப்பு, ஒப்பந்த முடிவுறுத்தல் செயன்முறை | திறன் விருத்தி மன்றம் | 01 | 4500.00 |
| 28. அலுவலக முகாமைத்துவம் தொடர்பிலான ஊழியர்களின் வினைத்திறன் விருத்தி | தேசிய ஊழியர் கல்வி நிறுவகம் | 01 | 9750.00 |
| 29. ஒழுக்கவியல் நடைமுறை | இஅநி (SDFL) | 02 | 16000.00 |
| **முழு மொத்தம்** | | | **935622.50** |

## ஆளணியினர் தொடர்பான விபரங்கள் - 2013

| விபரம் | எண்ணிக்கை |
|---|---|
| அங்கீகாரமளிக்கப்பட்ட ஆளணியினர் | 79 |
| சேவையாற்றுகின்ற அலுவலர்கள் | 68 |
| இடமாற்றம் பெற்றுச் சென்ற அலுவலர்கள் | 07 |
| இடமாற்றம் பெற்று வந்த அலுவலர்கள் | 04 |
| சேவை நிரந்தரமாக்கப்பட்ட அலுவலர்கள் | 02 |
| ஓய்வு பெற்ற அலுவலர்கள் | 02 |

# திட்டமிடல் பிரிவு

## அறிமுகம்

அமைச்சின் அபிவிருத்திப் பணிகள் இப்பிரிவின் ஊடாகவே முன்னெடுக்கப்படுகின்றன. அதற்கேற்ப தேசிய தேவைப்பாடுகளை இனங்கண்டு, அபிவிருத்திப் பணிகள் திட்டமிடப்படுவதுடன் அத்திட்டங்களை அமைச்சின் கீழ் இயங்குகின்ற திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்கள் மூலம் நாடு பூராவும் நடைமுறைப்படுத்துவதற்கான பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன. 2013 ஆம் ஆண்டின்செயற்பாட்டுத் திட்டத்திற்கு அமைவாக அதன் இலக்குகளை அடைந்து கொள்ளும் பொருட்டும், மஹிந்த சிந்தனை தூரநோக்கிற்கு அமைய எதிர்காலத்தில் அடைந்துகொள்ள வேண்டிய குறிக்கோள்ளை நோக்கியதான செயற்பாடுளை திட்டமிடல் மற்றும் அச் செயற்பாடுகளில் ஈடுபடல் என்பன இப்பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றன.

## பணிப்பொறுப்புக்கள்

- அமைச்சின் அபிவிருத்தி திட்டங்களைத் தயாரித்தல்.
- செயற்பாட்டுத் திட்டத்துக்கு அமைய அமைச்சின் கீழ் இயங்குகின்ற திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களுக்கிடையே இணைப்புப் பணிகளை மேற்கொண்டு மாதாந்த, காலாண்டு மற்றும் வருடாந்த முழுமையான மேம்பாட்டை அடைந்துகொள்ளல், தகவல்களை மீளாய்வு செய்து மேம்பாட்டு மீளாய்வு அறிக்கை தயாரித்தல் மற்றும் மேம்பாட்டு மீளாய்வு கூட்டங்களை நடத்துதல்
- இவ் அமைச்சுடன் இணைந்த திணைக்களங்களின் மூலதனச் செலவின மதிப்பீடு தயாரிப்பதற்கு ஒத்துழைப்பு வழங்குதல் மற்றும் அந்நிறுவனங்களின் ஊடாக நடைமுறைப்படுத்தப்படுகின்ற செயற்திட்டங்ளை கண்காணித்தலும் செயற்படுத்தலும்.
- இவ் அமைச்சுடன் இணைந்த நிறுவனங்களின் அபிவிருத்திப் பிரேரணைகள் தயாரிக்கும் போது தேவையான ஆலோசனைகளை வழங்குவதுடன் அவற்றை நிதி அமைச்சின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பித்தல்
- மஹிந்த சிந்தனை தூரநோக்கிற்கு அமைய மேம்பாட்டு மீளாய்வு செய்வதற்குத் தேவையான செயலாற்றுகைச் சுட்டியைத் தயாரித்தல்
- 50 மில்லியன் ரூபா தொகையை விட அதிகமான செயற்திட்டங்களின் மேம்பாடு தொடர்பாக நிதி அமைச்சுக்கு அறிக்கையிடல்
- வரவு செலவுத்திட்டத்தை செயற்குழுவிற்கு சமர்ப்பிக்கும் தருணத்தில் சமர்ப்பிக்கக் கூடியதாக அமைச்சின் செயலாற்றுகை அறிக்கையைத் தயாரித்தல்.
- ஆண்டுக்கான செயலாற்றுகை அறிக்கை தயாரித்தல்
- சனாதிபதி செயலகம், நிதி அமைச்சு, இலங்கை மத்திய வங்கி, பிற நேர் அமைச்சுக்கள் மற்றும் பாராளுமன்ற ஆலோசனைக் குழுக்கள் ஆகியவற்றுக்கு அவசியமான தகவல்களை வழங்குதல்
- அமைச்சுக்குக் குறித்தொதுக்கப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பான தகவல்களைச் சேகரித்தல் மற்றும் இற்றைவரையாக்கல்.

## 2013.12.31. ஆந் திகதிக்கான மேம்பாடு

- 2013 ஆம் ஆண்டிற்கான செயற்பாட்டுத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது
- அமைச்சின் கீழ் இயங்குகின்ற திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்கள் என்பவற்றின் காலாண்டு ரீதியான மேம்பாட்ட்டு மீளாய்வுக் கூட்டங்கள் நடாத்தப்பட்டன.
- 2014 ஆம் ஆண்டிற்கான மூலதனச் செலவுகள் தொடர்பான மதிப்பீடுகளைத் தயாரிப்பதற்குத் தேவையான அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.
- 2014 ஆம் ஆண்டிற்கான வரவுசெலவுத்திட்டத்திற்கு இணையாக நடாத்தப்பட்ட கூட்டங்களில் கலந்துகொண்டு தேவையான ஆலோசனைகள் வழங்கப்பட்டன.
- 50 மில்லியன் ரூபா பெறுமதிக்கு அதிகமான செயற்திட்டங்களின் மேம்பாட்டு பற்றி நிதி அமைச்சுக்குக் அனுப்பப்பட்டுள்ளது.
- அமைச்சின் செலவினத் தலைப்பு விடயத்தைப் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்த வேளையில், பெற்றுக் கொடுக்கும் 2013 ஆம் ஆண்டிற்கான மேம்பாடு மற்றும் எதிர்வரும் ஆண்டின் நிகழ்ச்சித்திட்டங்கள் அடங்கிய அறிக்கை தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.
- 2013 ஆம் ஆண்டு அம்பாறை மாவட்டத்தில் நடைபெற்ற தேசத்திற்கு மகுடம் என்ற தேசிய அபிவிருத்திக் கண்காட்சி நிகழ்ச்சித்திட்டத்தின் பணிகள் வெற்றிகரமாக நிறைவு செய்யப்பட்டன.
- 2013 ஆம் ஆண்டிற்கான செயலாற்றுகை அறிக்கை தயாரிக்கப்பட்டு உரிய நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.
- 2014 ஆம் ஆண்டிற்கான தேசத்திற்கு மகுடம் என்ற அபிவிருத்தி மற்றும் கண்காட்சி நிகழ்ச்சித்திட்டம் தொடர்பான பூர்வாங்கப் பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன.
- சனாதிபதி செயலகம், நிதி அமைச்சு, இலங்கை மத்திய வங்கி, பிற நேர் அமைச்சுக்கள் மற்றும் பாராளுமன்ற ஆலோசனைக் குழுக்கள் ஆகியவற்றுக்கு அவசியமான தகவல்களை வழங்குதல்

# அபிவிருத்திப் பிரிவு

## அறிமுகம்

இப்பிரிவின் மூலம் வனசீவராசிகள் அபிவிருத்தி பணிகளை முறைசார்ந்தவாறும் விளைதிறனானவாறும் செயற்படுத்தல் மற்றும் அமைச்சின் பேணல் பணிகளை சிறப்பாக ஒருங்கிணைத்தல்

## பணிப்பொறுப்புக்கள்

- வனசீவராசிகள் பாதுகாப்பு திணைக்களத்துக்கு உரியதான பணிளை நடைமுறைப்படுத்தும் போது தேவையான கொள்கைசார் தீர்மானங்களை மேற்கொள்ளல்.
- வனசீவராசிகள் பிரிவு சம்பந்தமாக அமைச்சுக்கு கிடைக்கப்பெறும் பொதுமக்களின் முறைப்பாடுகள் தொடர்பாக நடவடிக்கைகளை எடுத்தல்
- சனாதிபதி செயலகத்திற்குக் கிடைக்கப் பெறுகின்ற வனசீவராசிகள் விடயம் சம்பந்தமான பொதுமக்களின் முறைப்பாடுகள் தொடர்பாக நடவடிக்கைகளை எடுத்தல்
- வனசீவராசிகள் பாதுகாப்பு திணைக்களத்துக்கு சொந்தமான காணிகள் தொடர்பான பணிகள், காணி சுவீகரித்தல் பணிகள்.
- தேசிய வனப்பூங்காக்களில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்திப் பணிகள், மின்வேலிகள் அமைத்தல், காட்டு யானைகள் தடுப்பு நிலையம் நிர்மாணிப்புப் பணிகளின் ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்புப் பணிகள்.
- வனசீவராசிகள் பணிகளுக்கு குறித்த மற்றும் அமைச்சின் விடயப் பணிகளுக்கு உரிய ஏனைய அமைச்சுக்களின் மூலம் சமர்ப்பிக்கப்படுகின்ற அமைச்சரவை விஞ்ஞாபனம் தொடர்பாக அவதானிப்புக்களை சமர்ப்பித்தல்
- காட்டு யானைகளின் அச்சுறுத்தலுக்கு உட்படும் மக்களுக்காகத் தயாரிக்கப்பட்ட உத்தேச காப்புறுதித் திட்டம் தொடர்பாக கொள்கைசார் தீர்மானங்களை எடுத்தல் மற்றும் அவற்றை நடைமுறைப்படுத்துவதற்கு ஒத்துழைப்பு வழங்கல்
- நீர் வளங்கள் முகாமைத்துவ பணிகள் தொடர்பாக குறித்த நிறுவனங்களுடன் ஒன்றிணைந்து பணிபுரிதல்
- அமைச்சின் அனைத்துவித பேணல்சார்ந்த பணிகளை மேற்கொள்ளலும் அது தொடர்பாக தேவைப்படும் மதிப்பீடுகளை தயாரித்தல், சிபார்சு செய்தல் மற்றும் கொடுப்பனவு தொடர்பான அனுமதி வழங்கல்
- அமைச்சு கட்டிடத்தின் சிறு சிறு பேணல் பணிகளுக்காக கட்டுநிதி முற்பணம் வழங்குதல்
- அமைச்சின் அனைத்து பிரிவுகளுக்கும் Local Area Net work முறைமையை செயற்படுத்தல் மற்றும் இணைய வசதிகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல்
- அமைச்சிற்குரிய வளிச்சீராக்கி, தொலைநகல் இயந்திரம், நிழற்பிரதி இயந்திரம் மற்றும் கணனிகளின் பேணல் பணிகளை மேற்கொள்ளல்
- அமைச்சின் இணையத்தளத்தை இற்றைவரையாக்கல்

**2013.12.31 ஆந் திகதிய மேம்பாடு**

- வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம் தொடர்பில் கிடைத்த 50 பொது முறைப்பாடுகள் பற்றி விசாரிப்பதற்காக அந்த முறைப்பாடுகள் தொடர்பாக திணைக்களத்தினால் உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

- சனாதிபதி செயலகத்திற்குக் கிடைக்கப் பெறுகின்ற வனசீவராசிகள் விடயம் சம்பந்தமான 150 பொதுமக்களின் முறைப்பாடுகள் தொடர்பாக குறித்த நிறுவனங்களினால் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

- வனப்பாதுகாப்புத் திணைக்களத்திற்குச் சொந்தமான காணிகள் தொடர்பில் வெளி நபர்களுக்கும் மற்றும் நிறுவனங்களுக்கும் இடையில் நிலவிய 14 பிணக்குகளைத் தீர்த்து வைக்கும் நிமித்தம் ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

- தேசிய வனப் பூங்காக்களில் குளங்கள் பனரமைப்புக்காக கமநல அபிவிருத்தித் திணைக்களத்துடன் ஒன்றிணைந்த ஒரு நிகழ்ச்சித்திட்டத்தைச் செயற்படுத்தி அந்த நிகழ்ச்சித்திட்டத்தின் முன்னேற்றம் பற்றி மீளாய்வு செய்யப்பட்டுள்ளது.

- அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களைச் செயற்படுத்தச் செய்யும் நிமித்தம் தேவையான சந்தர்ப்பங்களில் அமைச்சு உதவிகளை வழங்கியுள்ளது.

- காட்டு யானைகளினால் ஏற்படுகின்ற அழிவுகளைக் குறைப்பதற்காக யானைகள் தடுப்பு நிலையத் தாபிப்புத் திட்டத்தின் கீழ் ஹொரவப்பொத்தான காட்டு யானைகள் தடுப்பு நிலையத்தை நிர்மாணிப்பது குறித்த கண்காணிப்புப் பணிகளை மேற்கொள்ளல்.

- வனசீவராசிகள் பாதுகாப்பு விடயம் பற்றி ஏனைய அமைச்சுகளினால் முன்வைக்கப்பட்டிருந்த 10 அமைச்சரவை பத்திரங்கள் தொடர்பான அவதானிப்புகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

- காட்டு யானைகளின் அச்சுறுத்தல்களுக்கு உள்ளாகும் மக்களுக்காகத் தயாரிக்கப்படுகின்ற காப்புறுதித் திட்டம் பற்றி பொருளாதார அபிவிருத்தி அமைச்சு, தேசிய கொள்கைத் திட்டமிடல் திணைக்களம், வரவுசெலவுத் திட்டமிடல் திணைக்களம், கமக்காரர் காப்புறுதிச் சபை என்பவற்றுடன் பேச்சுவார்த்தைகள் நடாத்தப்பட்டு உரிய விடயங்கள் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன.

- நீர் வளங்கள் முகாமைத்துவ பணிகள் தொடர்பாக குறித்த நிறுவனங்கள் மூலம் நடத்தப்படுகின்ற கூட்டங்கள் மற்றும் செயலமர்வுகளில் கலந்து கொண்டுள்ளனர்.

- வனசீவராசிகள் பாதுகாப்பு சம்பந்தமான பொதுப் பணிகளில் ஈடுபடல்

- வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்துக்கு உரியதான காணி சுவீகரிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளல்

- நடப்பாண்டில் அமைச்சின் அனைத்துவித பேணல் நடவடிக்கைகள் தொடர்பாக 3,357,039.00 ரூபா செலவிடப்பட்டுள்ளதுடன் மதிப்பீடுகளைத் தயாரித்தல், சிபார்சு செய்தல், நிர்மாணிப்பு நடவடிக்கைகளை கண்காணித்தல் மற்றும் குறித்த கொடுப்பனவுகள் தொடர்பான அங்கீகாரம் வழங்கல் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

- அமைச்சின் கட்டிடத்தில் மின்சாரம், நீர் விநியோகம், துப்புரவேற்பாடு முதலிய துரிதமாக மேற்கொள்ள வேண்டிய சிறு பராமரிப்பு தொடர்பில் 50,359.00 ரூபா செலவிடப்பட்டுள்ளது.

- இந்த அமைச்சின் அலுவலக அறைகளுக்கு 25 குளிரூட்டிகள் பொருத்தப்பட்டுள்ளன. இந்தக் குளிரூட்டிகள் ஒரு வருடத்திற்கு மூன்று தடவைகள் சேவிஸ் பண்ணப்படுகின்றன. சேவை ஒப்பந்தத்தைச் செய்வதற்கு இந்த ஆண்டில் 230,530.00 ரூபா தொகை செலவிடப்பட்டுள்ளது. அதற்கு மேலதிகமாக அத் திருத்தங்கள் தேவையான சந்தர்ப்பங்களில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

- 11 தொலைநகல்களை சேவிஸ் பண்ணுவதற்காக 2013 ஆம் ஆண்டு தொடர்பில் 40,768.00 ரூபா தொகை செலுத்தப்பட்டுள்ளது. ஒரு வருடத்திற்கு 04 தடவைகள் சேவிஸ் பண்ணப்பட்டுள்ளன.

- அமைச்சின் 18 நிழற் பிரதியெடுக்கும் இயந்திரங்களின் சேவை ஒப்பந்தத்திற்கு 2013 ஆம் ஆண்டில் 146,010.00 ரூபா தொகை செலுத்தப்பட்டுள்ளது. ஒரு வருடத்திற்கு 04 தடவைகள் சேவிஸ் பண்ணப்பட்டுள்ளன.

- கணனிகளின் பழுபார்ப்புப் பணிகள் தேவையான சந்தர்ப்பங்களில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

- மாதாந்தம் 3085.69 ரூபா தொகையைச் செலவிட்டு அமைச்சின் அலுவலர்களுக்கு 15 மின்னஞ்சல் முகவரிகள் வழங்கப்பட்டன. அது தொடர்பாக வருடாந்தம் ரூபா 20,571.26 செலவிடப்படுகின்றது.

# கணக்குப் பிரிவு

## அறிமுகம்

அமைச்சின் கணக்குப் பிரிவு 02 பிரதான பிரிவுளை உள்ளடக்கியுள்ளது. அதாவது நிதிப் பிரிவு மற்றும் கொடுப்பனவு, பெறுகைப் பிரிவு என்பனவாகும். நிதிப் பிரிவினால், ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டத்தை தயாரித்தல், ஒதுக்கீட்டு கணக்கு தயாரித்தல், கட்டுநிதித் தேவைப்பாடுகளை பெற்றுக் கொள்ளல் மற்றும் திறைசேரியுடன் உரிய இணைப்புப் பணிகளை மேற்கொள்ளல் என்பன இடம்பெறுகின்றன. பெறுகைப் பிரிவு, அமைச்சினதும் அதன் கீழ் இயங்கும் நிறுவனங்களினதும் பெறுகை சார்ந்த பணிகளை நிறைவேற்றல், அது தொடர்பான கண்காணிப்புப் பணிகளை மேற்கொள்வதுடன் அமைச்சின் அனைத்து கொடுப்பனவு சார் பணிகளையும் மேற்கொள்கின்றது.

## பணிப்பொறுப்பு

- ஆண்டுக்கான ஒதுக்கீட்டு சட்டத்தின் மூலம் அதிகாரமளிக்கப்பட்டுள்ள செலவினங்களை முகாமைத்துவப்படுத்தல் தொடர்பான நிதிப் பிரமாணங்கள், கட்டளைச் சட்டங்கள், சுற்றறிக்கை அறிவுறுத்தல்கள் ஆகியவற்றுக்கு அமைய நடவடிக்கைகளை மேற்கொண்டு நாளாந்த, மாதாந்த மற்றும் வருடாந்த கணக்குகளை உரியவாறு பேணல்
- வள முகமைத்துவம்
- நடப்பாண்டின் செலவின மற்றும் வருமான மதிப்பீடு தயாரித்தல்
- அமைச்சுக்கு உரியதான வேதனம், கடன் முற்பணம், பொதுவைப்பு ஆகியன உட்பட அனைத்து மூலதன மற்றும் மீண்டுவரும் கொடுப்பனவுப் பணிகளை மேற்கொள்ளலும், செலவின முகாமைப்படுத்தலும்.
- அமைச்சினதும், அமைச்சின் கீழ் இயங்குகின்ற திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களினதும் பெறுகைக்குழு நியமித்தல் மற்றும் பெறுகைசார் பணிகளை நிறைவேற்றல் மற்றும் அவற்றைக் கண்காணித்தல்
- அமைச்சினதும், அமைச்சின் கீழ் இயங்குகின்ற நிறுவனங்களினதும் உரிய அரசாங்க அரசாங்க கணக்குத் தெரிவுக் குழு மற்றும் அரசாங்க வியாபாரத் தெரிவுக்குழுவுக்கும் உரிய பணிளை நிறவேற்றல்
- அமைச்சினது மாதாந்த, வருடாந்த கணக்குகளைத் தயாரித்தல், அமைச்சின் கீழ் இயங்குகின்ற நிறுவனங்களினது வருடாந்த கணக்குகள் மற்றும் அறிக்கைகளை கண்காணித்தல்.
- அரசாங்க அலுவலர்களின் முற்பண பீ கணக்கிலிருந்து கடன் வழங்கல், அவற்றை உரியவாறு அறவிடல் மற்றும் அதற்கு உரியதான கணக்குகளைப் பேணல்

.

# 2013.12.31 ஆம் திகதிக்கான நிதிசார் முன்னேற்றம்

**நிகழ்ச்சித்திட்டம் 01 - செயற்பாட்டு நிகழ்ச்சித்திட்டம்**
**அமைச்சரின் அலுவலகம்**

| விபரம் | 2013 ஆம் ஆண்டிற்கான மதிப்பீடு (ரூ.மில்.) | திருத்தப்பட்ட மதிப்பீடு (ரூ.மில்.) | 2013.12.31 இல் மொத்தச் செலவு (ரூ.மில்.) | விகிதம் (%) |
|---|---|---|---|---|
| | | | | |
| **மீண்டெழும் செலவினம்** | **22.57** | **24.73** | **24.36** | **99** |
| தனியாள் வேதனாதிகள் | 8.70 | 9.08 | 8.93 | 98 |
| பிரயாணச் செலவுகள் | 1.20 | 1.02 | 0.98 | 96 |
| வழங்கல்கள் | 6.31 | 6.67 | 6.64 | 100 |
| பராமரிப்புச் செலவுகள் | 3.00 | 4.86 | 4.84 | 100 |
| சேவைகள் | 3.36 | 3.10 | 2.97 | 96 |
| **மூலதனச் செலவினம்** | **4.77** | **16.14** | **15.74** | **98** |
| மூலதனச் சொத்துக்கள் புனரமைப்பும் மேம்பாடும் | 1.77 | 2.75 | 2.40 | 87 |
| மூலதனச் சொத்துக்களின் கொள்ளல் | 3.00 | 13.39 | 13.34 | 100 |
| **மொத்தச் செலவு** | **27.34** | **40.87** | **40.10** | **98** |

**நிகழ்ச்சித்திட்டம் 01 - செயற்பாட்டு நிகழ்ச்சித்திட்டம்**
**செயற்திட்டம் 02 - தாபன நிருவாக சேவைகள்**

| விபரம் | 2013 ஆம் ஆண்டிற்கான மதிப்பீடு (ரூ.மில்.) | திருத்தப்பட்ட மதிப்பீடு (ரூ.மில்.) | 2013.12.31 இல் மொத்தச் செலவு (ரூ.மில்.) | விகிதம் (%) |
|---|---|---|---|---|
| | | | | |
| **மீண்டெழும் செலவினம்** | **53.69** | **50.95** | **50.08** | **98** |
| தனியாள் வேதனாதிகள் | 32.20 | 30.80 | 30.56 | 99 |
| பிரயாணச் செலவுகள் | 1.30 | 1.19 | 0.83 | 70 |
| வழங்கல்கள் | 7.31 | 7.82 | 7.80 | 100 |
| பராமரிப்புச் செலவுகள் | 5.80 | 5.23 | 5.03 | 96 |
| சேவைகள் | 6.08 | 5.31 | 5.28 | 99 |
| அரச கடன் வட்டி | 1.00 | 0.60 | 0.58 | 97 |
| **மூலதனச் செலவினம்** | **8.88** | **9.41** | **8.12** | **86** |
| மூலதனச் சொத்துக்களின் புனமைப்பும் மேம்படுத்தலும் | 2.25 | 2.78 | 1.78 | 64 |
| மூலதனச் சொத்துக்களின் கொள்ளல் | 5.63 | 5.63 | 5.39 | 96 |
| திறன் விருத்தி | 1.00 | 1.00 | 0.95 | 95 |
| **மொத்தச் செலவு** | **62.57** | **60.36** | **58.20** | **96** |

# உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு

## அறிமுகம்

வனசீவராசிகள் வளங்கள் பாதுகாப்பு அமைச்சு, வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம், அதற்குரிய பணிப்பாளர் அலுவலகம், வனபரிபாலன அலுவலகம், பிட்டு அலுவலகம் ஆகிய நிறுவனங்களின் நோக்கங்கள் மற்றும் பணிப் பொறுப்புக்களை நிறைவேற்றுவது தொடர்பாக பயன்படுத்தப்படுகின்ற வளங்களின் சிறந்த முகாமைத்துவம், அரசாங்கத்தின் கட்டளைச் சட்டங்கள், சுற்றறிக்கைகள், நிதிப்பிரமாணம், தாபனக்கோவை என்பனவற்றின் விதிமுறைகளுக்கு அமைவாக மேற்கொள்ளப்படுகின்றனவா என்பது பற்றி பரிசீலித்து அது தொடர்பான அவதானிப்புக்கள் மற்றும் சிபார்சு என்பன தொடர்பாக சிரேஷ்ட முகாமைத்துவத்திற்கு சமர்ப்பித்தல் ஆகியன உள்ளகக் கணக்காய்வின் நோக்கங்களாகும்.

## பணிப்பொறுப்பு

- அமைச்சு, வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம் மற்றும் வனசீவராசிகள் பொறுப்பு என்பனவற்றின் உள்ளக முறைமைகளை இனங்காணல் மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல்
- உள்ளக கணக்காய்வு பரிசீலனைகளின் மூலம் நிறுவகப் பணிகள், நிதி முகாமைத்துவம் ஆகியனவற்றை செயற்படுத்தல்
- கணக்காய்வு முகாமைத்துவ குழுக் கூட்டங்களின் மூலம் அமைச்சு மற்றும் அதனுடன் இணைந்த வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம், வனசீவராசிகள் பொறுப்பு ஆகியவற்றின் உயர் முகாமைத்துவத்துக்கு ஒத்துழைப்பு வழங்கல்.
- அமைச்சு, வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம் மற்றும் வனசீவராசிகள் பொறுப்பு ஆகியவற்றின் உள்ளக கணக்காய்வு பணிகளை பேணுவதனூடாக சிறந்த நிதிசார் முகாமைத்துவத்தை பேணல் மற்றும் அரசாங்க கணக்காய்வுக்கு ஒத்துழைப்பு வழங்குதல்
- அரசாங்கத்தின் வளங்களை பயன்படுத்தி அரசாங்கத்தின் கட்டளைச் சட்டங்கள், நிதிப்பிரமாணங்கள், தாபனக்கோவை ஏற்பாடுகள் ஆகியனவற்றுக்கு அமைய நடவடிக்கை எடுக்கப்படுகின்றதா என்பது பற்றி பரிசீலனை செய்து சிபார்சுகளைச் சமர்ப்பித்தல்

## 2013.12.31 ஆம் திகதிக்கான முன்னேற்றம்

- வனசீவராசிகள் வளங்கள் பாதுகாப்பு அமைச்சின் நாளாந்த ஓட்டக் குறிப்புக்களின் பரிசீலனை.
- உடவளவை தேசிய பூங்கா மற்றும் யானை பாதுகாப்பு அலுவலகம் என்பவற்றின் கணக்காய்வுப் பரிசீலனை
- தெற்கு – ஊவா உதவிப் பணிப்பாளர் அலுவலகங்கள் மற்றும் அதற்குரித்தான வனபரிபாலன அலுவலகம், 'பீட்டு' அலுவலகம் ஆகியவற்றின் கணக்காய்வுப் பரிசீலனை
- மத்திய வலய உதவிப் பணிப்பாளர் அலுவலகம், ஹோர்ட்டன்தென்ன தேசிய பூங்கா, வனப்பரிபால பாதுகாப்பு அலுவலகம் மற்றும் பீட்டு அலுவலகம் என்பவற்றின் கணக்காய்வுப் பரிசீலனை
- பொலன்னறுவை வலைய உதவி பணிப்பாளர் அலுவலகம், தேசிய பூங்கா, பீட்டு அலுவலகம் மற்றும் வனபரிபாலன அலுவலகம் என்பவற்றின் கணக்காய்வுப் பரிசீலனை
- அநுராதபுர வலைய உதவி பணிப்பாளர் அலுவலகம், வில்பத்து தேசிய வனப்பூங்கா, தலைமையக அலுவலகம் ஆகிய நிர்மாணிப்புக்களின் கணக்காய்வுப் பரிசீலனை.

# சட்டப் பிரிவு

## பணிப்பொறுப்பு

வனசீவராசி வளங்கள் பாதுகாப்பு அமைச்சு மற்றும் அதன் கீழ் இயங்குகின்ற வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம், இலங்கை வனசீவராசிகள் பொறுப்பு ஆகிய நிறுவனங்கள் தொடர்பில் அமைச்சினால் நிறைவேற்ற வேண்டிய சட்ட விடயங்களைக் கண்காணிக்கும் பணி இந்தச் சட்டப் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது.
இந்தப் பணிகள்,

- 1937 இன் 07 ஆம் இலக்க வன விலங்குகள் மற்றும் தாவரங்கள் பாதுகாப்புச் கட்டளைச் (469 ஆம் அதிகாரம்) சட்டத்தை நடைமுறைப்படுத்துதல்.

மேலும், இந்தச் சட்டங்களை நடைமுறைப்படுத்துதல், கண்காணித்தல், அந்தச் சட்டங்களுக்குத் தேவையான ஒழுங்கு விதிகள், கட்டளைகள் மற்றும் திருத்தங்கள் என்பன தொடர்பான ஆலோசனைப் பணிகளை நிறைவேற்றுதல் மற்றும் திருத்தப்படும் அந்தச் சட்டமூலங்களை சட்ட வரைஞருக்குச் சமர்ப்பித்தல் ஆகிய விடயங்கள் இந்தப் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றன.

இன்று நடைமுறையிலிருக்கின்ற தேசிய வனசீவராசிகள் பற்றிய கொள்கைகளையும் சட்டங்களையும் பயனுள்ள விதத்தில் செயற்படுத்துவது விலங்குகள் மற்றும் தாவரங்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் பணிப்பொறுப்பு ஆகும். அதற்காக குறித்த சட்டத்தின் சட்ட ஏற்பாடுகளின் கீழ் தேவையான கட்டளைகள் மற்றும் விதிமுறைகள் என்பனவற்றை தயாரிக்கும் பணிகள் திணைக்களத்தின் உதவியுடன் இந்தப் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றன.

அதே போன்று வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம் சட்ட விடயங்கள் தொடர்பில் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் முறையாக நிகழாத சந்தர்ப்பங்கள் பற்றி அமைச்சுக்குக் கிடைக்கின்ற கடிதங்கள் மற்றும் முறைப்பாடுகள் என்பன தொடர்பில் தேவையான அறிவுரைகள் இந்தப் பிரிவினால் வழங்கப்படுகின்றன.

அத்துடன் அமைச்சு மற்றும் அமைச்சின் கீழ் இயங்குகின்ற திணைக்களம் மற்றும் வனசீவராசிகள் பொறுப்பு ஆகிய நிறுவனங்களுக்கு வழக்குகள், ஒப்பந்தங்கள், சட்ட ஆலோசனைகள் மற்றும் நீதிமன்ற நடவடிக்கைகளுடன் தொடர்புடைய ஏனைய வழக்கு விடயங்கள் என்பவற்றின் கண்காணிப்பு மற்றும் ஒருங்கிணைப்புப் பணிகள் இந்தச் சட்டப் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றன.

திணைக்களத்தின் நாடுதழுவிய சுற்றிவளைப்புக்கள் சம்பந்தமாக மாதாந்த சுருக்கக் கூற்று அறிக்கை வலைய மட்டத்தில் இருந்து பெற்று அச் சுற்றிவளைப்புகளுக்கு உரிய வழக்குத் தொடரல் மற்றும் அவற்றின் வழக்குத் தீர்ப்புக்களை கவனத்திற்கொண்டு மொத்த சுற்றிவளைப்புக்களையும் மீளாய்வு செய்வது இப்பிரிவின் பணியாகும்.

# வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம்

# வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம்



## றிமுகம்

இலங்கையின் பாரிய பல்லுயிர்த்தன்மைக்கு கட்டியம் கூறுகின்ற இவ்வாறான தாவரங்கள் மற்றும் கால்நடைகளையும் மனிதர்கள் வாழ்கின்ற சுற்றாடலையும் பாதுகாக்க வேண்டிய பிரதான பொறுப்பு வனசீவராசிகள் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. 1949 ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட வனசீவராசிகள் திணைக்களத்தின் பிரதான கடப்பாடு என்னவெனில், இலங்கையில் வனசீவராசி வளங்களைப் பாதுகாக்கப்பது ஆகும். அதற்கமைய இலங்கையின் அனைத்து ஆற்று மூலங்களையும் விவசாயத்துறை மற்றும் மின்சார உருவாக்கம் தொடர்பாக நீரை வழங்குகுன்ற பாரியவிலான நீர்த்தேங்கள் உட்பட 40 நீர்த்தேக்கங்களின் நீரேந்துப் பகுதிகள் பாதுகாக்கப்படுவது வனசீவராசிகள் வலையமைப்பின் ஊடாகவே ஆகும். இந் நாட்டின் மொத்த நிலப்பரப்பில் 13% விஞ்சிய வனசீவராசிகள் பாதுகாப்பு வலையமைப்பு முகாமைப்படுத்தப்படும் போது வனசீவராசிகள் பாதுகாப்பு திணைக்களத்திடமே அதற்கான பொறுப்பு ஒப்படைக்கப்படுகின்றது. அவ் வனசீவராசிகள் வனப்பாதுகாப்பு வலையமைப்பு பல்வேறு பாதுகாப்பு மட்டங்களின் கீழ் பிரசகடனப்படுத்தப்பட்ட வனசீவராசி வனப்பாதுகாப்புக்களையும் உள்ளடக்கியுள்ளன.

## தொலைநோக்கு

‘‘இன்றைய மற்றும் நாளைய சந்ததியினருக்காக வன வளங்களை நீண்ட காலத்திற்குப் பாதுகாப்பது ஆகும்’’

## பணிநோக்கு

‘‘அனைவரும் ஒன்றிணைந்து தொழில் சார்ந்த ஒரு முகாமைத்துவத்தினூடாக வன சீவராசி வளங்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துதல் ஆகும்’’

## பணிப்பொறுப்பு

- ''அனைத்து பூகோள, காலநிலை மற்றும் பல்லினத்தன்மை வலையங்களினுள் வனசீவராசி வளங்களை போதியளவில் உள்ளடக்கியுள்ள இலங்கை வனசீவராசிகள் வனப்பாதுகாப்பு வலையமைப்பை தாபித்தலின் மூலம் அவற்றின் ஸ்திரத்தன்மையை பேணல்

- விவசாயத்துறை, நீர்மின்சார உருவாக்கம் தொடர்பாக நீர் வழங்குகின்ற பாரியளவிலான நீர்த்தேங்களின் நீரேந்துப் பிரதேசங்களை பாதுகாத்தல், சமய மற்றும் கலாசார மரபுரிமைகளைப் பேணல், தனித்துவமான அரிதான வனசீவராசிகளை பாதுகாத்தல், விசேட சுற்றாடல் முறைமைகளை பாதுகாத்தல் ஆகிய விசேட நோக்கங்களைக் கொண்டுள்ள வனசீவராசிகள் ஒதுக்கிடங்கள் பிரகடனப்படுத்தப்பட்டு வனசீவராசிகள் ஒதுக்கிடங்கள் வலைமைப்பை உரியவாறு முகாமைப்படுத்தல்.

- மலடாக கூடிய அச்சுறுதலுக்கு ஆளாகியுள்ள தேசிய வனசீவராசிகளின் பாதுகாப்பு தொடர்பாக தகுந்த செயன்முறைகளை கையாண்டு விசேட செயற்திட்டங்களை திட்டமிட்டு நடைமுறைப்படுத்துவதன் மூலம் அவ்வுயிரினங்களின் நீண்டகால இருப்புக்கு உத்தரவாதமளித்தல்

- வனசீவராசிகள் ஒதுக்கிடங்களின் வெளிப் பிரதேசங்களில் பாதுகாப்பாக வாழக்கூடியவாறு வனசீவராசிகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்தல்

- தற்காலத்தில் நடைமுறைப்படுத்தப்படுகின்ற தேசிய வனசீவராசிகள் கொள்கை மற்றும் சட்டத்தை வினைத்திறன் வாய்ந்த முறையில் கையாளல்

- இலங்கை அரசாங்கத்தினால் கையொப்பமிடப்பட்டுள்ள வனசீவராசிகள் பாதுகாப்பு குறித்து மலடாகக் கூடிய வாய்ப்புள்ள கால்நடைகள் வியாபாரம் தொடர்பான சமவாயம் CITES), சர்வதேச முக்கியத்துவம் வாய்ந்த ஈரலிப்பு பிரதேசங்கள் தொடர்பான சமவாயம் (Ramsar) மற்றும் குடிபெயரும் வனவிலங்குகளின் பாதுகாப்பு தொடர்பான சமவாயம் ஆகிய சர்வதேச சமவாயங்களின் செயற்பாடு தொடரபாக வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய செயற்படுதல்

- வனசீவராசிகள் ஒதுக்கிடங்களுக்கு அருகே சுற்றாடல் சுற்றுலாத்துறையை மேம்படுத்துவதன் மூலம் தேசிய பொருளாதாரத்திற்கு அதன் பங்களிப்பை வழங்க முடியும்

- வனசீவராசி வளங்களின் பாதுகாப்பு மற்றும் விஞ்ஞான ரீதியிலான முகாமைத்துவம் தொடர்பான தரவுகளையும் தகவல்களையும் சேகரிப்பதற்கான ஆய்வுப் பணிகளை மேற்கொள்ளல்

- இயற்கை வளங்களை பாதுகாப்பதை நோக்காகக் கொண்டு பிற நிறுவனங்களுடன் ஒத்தழைப்புடன் அன்னியோன்ய புரிந்துணர்வைக் கட்டியெழுப்புவதனூடாக பாதுகாப்பு செயற்பாடுகளை வலுப்படுத்தல்

- சாதாரணப் பொதுமக்கள், அரச அலுவலர்கள் ஏனைய குழுக்கள் ஆகியோருக்கிடையே வனசீவராசிகள் பாதுகாப்பினை விஸ்தரிப்பதனூடாக அவர்களின் பங்களிப்புக்களை பெற்றுக்கொள்வதை இலக்காகக் கொண்ட வனசீவராசிகள் பாதுகாப்பு கற்கை நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்தல்
- வனசீவராசிகள் ஒதுக்கிடங்களுக்குள் இயற்கை வளங்களைச் சுற்றி வாழ்விடங்கள் குறைக்கப்பட வேண்டும் என்பதை நோக்காகக் கொண்டு சமூக பொருளாதார நிழ்ச்சித் திட்டங்களை திட்டமிட்டு நடைமுறைப்படுத்தல்.

# அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களின் முன்னேற்றம் - 2013

## 1. மின்வேலிகள் அமைத்தல்

கஜமித்துரோ என்ற நிகழ்ச்சித்திட்டம் 2012 இல் முடிவுறுத்தப்பட்ட போதிலும், 2013 ஆண்டில் திரட்டிய நிதியத்தின் ஒதுக்கீடுகளின் கீழ் மின்வேலிகள் அமைக்கும் பணிகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும்.

**நோக்கங்கள்**

- யானை – மனிதன் என்ற பிரச்சினையை ஓரளவுக்கு குறைத்தல்
- யானை – மனிதன் என்ற பிரச்சினையைக் குறைப்பது தொடர்பான மூலோபாய அபிவிருத்தியும் திறன்விருத்தியும்





**2013 ஆம் ஆண்டு ஒதுக்கப்பட்ட நிதி - ரூ.மில். 100.32**
**நிதி முன்னேற்றம் - ரூ.மில். 110.91**
**பௌதீக முன்னேற்றம்**

- காட்டு யானை– மனிதன் பிரச்சினையை குறைப்பது தொடர்பாக தேசிய திட்டமொன்று தயாரிக்கப்பட்டு அது பூர்த்தியடையும் தருவாயில் உள்ளது
- 708.5 கி.மீ நீளமான மின்சார வேலிகள் அமைப்பதற்கான பொருட்களை கொள்வனவு செய்து பாதுகாப்புத் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன் வேலிகள் அமைக்கப்பட்டு வருகின்றன.

## 2. ஹொரவபொத்தானை யானை பாதுகாப்பு வனப்பூங்கா நிர்மாணம்

கிராமங்களுக்குள் புகுந்து தொல்லை கொடுக்கின்ற காட்டு யானைகளை, யானைகள் சரணாலயங்களுக்கு விடுவித்து யானை - மனிதன் பிரச்சினையை ஓரளவு குறைப்பதை பிரதான நோக்கமாகக் கொண்டு 2012 ஆண்டின் திரட்டிய நிதியத்தின் நிதியொதுக்கீட்டின் கீழ் இது ஆரம்பிக்கப்பட்டது.

**நோக்கங்கள்**

- யானை – மனிதன் என்ற பிரச்சினை காணப்படுகின்ற பகுதிகளில் சமூக - பொருளாதார அழிவுகளைக் குறைத்தல்
- யானை பாதுகாப்பு வனப்பூங்காவின் ஊடாக சுற்றாடல் சுற்றுலா சார்ந்த நடவடிக்கைகளை ஊக்குவித்தல்
- யானை பாதுகாப்பு வனப்பூங்காவின் ஊடாக அப்பிரதேசத்தில் வசிக்கும் மக்களுக்கு வருமானமீட்டும் வழிகளை ஏற்படுத்திக் கொடுத்தல்

**2013 ஆம் ஆண்டு ஒதுக்கப்பட்ட நிதி - ரூ.மில். 300.0**

**நிதி முன்னேற்றம் - ரூ.மில். 133.86**

**பௌதீக முன்னேற்றம்**

- 16 கி.மீ நீளமான மின்சார வேலி நிர்மாணிப்பதற்காக பாதை சுத்தமாக்கப்பட்டுள்ளதுடன் 22 சப்பாத்துப் பாலங்களின் நிர்மாணிப்புப் பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன.
- விஷேடமாகத் திட்டமிடப்பட்ட ஏறக்குறைய 2,100 மின்சார வேலி கொங்கிறீட் கம்பங்கள் நிர்மாணித்து, கேபிள் கம்பங்கள் நடப்பட்டுள்ளன.
- 03 வாவிகளின் (புளியங்குளம், சியம்பளாகஸ் வாவி, 5 ஆம் கம்ப வாவி) நிர்மாணிப்புப் பணிகள் முடிவுறுத்தப்பட்டுள்ளன.
- மொடகொல்லேவ அலுவலகம் மற்றும் விடுதி கட்டிட நிர்மாணிப்புப் பணிகள் முடிவுறுத்தப்பட்டுள்ளன.
- கபுகொல்லேவ அலுவலகம் மற்றும் விடுதி கட்டிட நிர்மாணிப்புப் பணிகள் முடிவுறுத்தப்பட்டுள்ளன.





**3. தெயட்ட கிருல தேசிய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம்**

2013 **தெயட்ட கிருல** (தேசத்திற்கு மகுடம்) அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்திற்கு திரட்டிய நிதியத்தின் நிதி ஒதுக்கீடுகளின் அடிப்படையில் வனசீவராசி பாதுகாப்புத் திணைக்களத்தினால் பின்வரும் அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

- தேசிய சரணாலய வளாகத்தினுள் சுற்றாடல் சுற்றுலா விடயங்களை மேம்படுத்துதல்
- வனசீவராசிகள் ஒதுக்கிட வலையமைப்பினுள் நிருவாக மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை விருத்தி செய்தல்
- வனசீவராசிகள் ஒதுக்கிட வலயத்தை விஸ்தரித்தல்
- தகவல் தொடர்பாடல் வலையமைப்பை மேம்படுத்துதல்

**2013 ஆம் ஆண்டு ஒதுக்கப்பட்ட நிதி - ரூ.மில். 100.0**

**நிதி முன்னேற்றம் - ரூ.மில். 98.32**

**பௌதீக முன்னேற்றம்**

- 2013 அம்பாறை தேசத்திற்கு மகுடம் எனும் தேசிய அபிவிருத்திக் கண்காட்சி வெற்றிகரமாக நிறைவுற்றது.
- 258 கி.மீ நீளமான மின்சார வேலியை அமைப்பதற்குத் தேவையான பொருட் கொள்வனவு பூர்த்திசெய்யப்பட்டுள்ளதுடன் 77 கி.மீ. எஞ்சிய அதன் நிர்மாணிப்புப் பணிகள் சிவில் பாதுகாப்பு திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

## 4. மொரகஹகந்தைக் செயற்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படுகின்ற வனசீவராசிகள் பாதுகாப்பு விடயங்கள்

மொரகஹகந்தை–களுகங்கைக் செயற்திட்டத்தின் நிதியேற்பாட்டின் கீழ் 2008 ஆம் ஆண்டு முதல் வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் மூலம் களுகங்கை கங்காதார பகுதியில் பின்வரும் நோக்கங்களுக்காக வனசீவராசிகள் பாதுகாப்பு சார்ந்த விடயங்கள் செயற்படுத்தப்பட்டு வருகின்றன.

### நோக்கங்கள்

- களுகங்கை மற்றும் உத்தேச மொரகஹகந்த நீர்த்தேக்கத்தை அண்டிய வலயமொன்றை பிரகடனப்படுத்தல் மற்றும் அங்கு மனித நடமாட்டங்களை குறைத்தல்
- மேற்படி பிரதேசத்தில் யானை– மனிதன் மோதலைக் குறைப்பதற்காக வனசீவராசி தடைகளை அமைத்தல் ( மின் வேலிகள், அகழிகள் தோண்டல்)
- யானை– மனிதன் மோதலைக் குறைப்பதற்காக விஸ்தரிக்கப்படவுள்ள பிரதேசத்தில் வனசீவராசி வாழ்விடங்களை மேம்படுத்தல்
- விஸ்தரிக்கப்படவுள்ள பிரதேசத்தை அண்டியுள்ள வனசீவராசி ஒதுக்கிடங்களில் சுற்றாடல் சுற்றுலாத்துறையை மேம்படுத்தல்
- விஸ்தரிக்கப்படவுள்ள பிரதேசத்தில் அண்டியுள்ள வனசீவராசி ஒதுக்கிடங்களில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தல்.

**2013 ஆம் ஆண்டு ஒதுக்கப்பட்ட நிதி - ரூ.மில். 41.19**

**நிதி முன்னேற்றம் - ரூ.மில். 38.28**

**பௌதீக முன்னேற்றம்**

- 136 கி.மீ நீளமான மின்சார வேலிகளை அமைப்பதற்குத் தேவையான பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளதுடன் அதில் 121 கி.மீ. நிர்மாணிப்பு வேலைகள் பூர்த்திசெய்யப்பட்டுள்ளன.
- 20 அறிவித்தல் பதாகைகளில் பழுதுபார்த்தல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
- 04 வனசீவராசிகள் பங்களாக்களில் திருத்தவேலைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
- 22 கி.மீ. நீளத்துக்கு ஒதுக்கிட பிரதேசங்களின் வீதிகளின் இருமருங்கும் செப்பனிடப்பட்டுள்ளன.
- வஸ்கமுவ தேசிய வனப்பூங்காவில் 03 வாவிகள் மறுசீர்மைக்கப்பட்டுள்ளன.

## வனசீவராசிகள் திணைக்களத்தின் மூலம் நடைமுறைப்படுத்தப்பட்ட பிற நிகழ்ச்சித்திட்டங்களின் நிதி மற்றும் பௌதீக முன்னேற்றம் (2013.12.31 திகதியில்)

| தொடர் இல. | நிகழ்ச்சித்திட்டங்கள் | நிதி (ரூ.மில்.) | நிதி முன்னேற்றம் (ரூ.மில்.) | பௌதீக முன்னேற்றம் |
|---|---|---|---|---|
| 1. | **வனப் பாதுகாப்புப் பிரதேச வலையமைப்பைத் தாபித்தல்**<br><br>மடு வீதி அபயபூமியின் அறிவித்தல் பதாகை<br><br>சுண்டிக்குளம் அபயபூமியின் அறிவித்தல் பதாகை | 5.0 | 4.98 | • **சோமாவதி தேசிய வனப் பூங்காவில் 600 எல்லைக் கம்பங்களும், மாதுகங்கை அபயபூமியில் 75 எல்லைக் கம்பங்களும், தம்போவ அபயபூமியில் 3 கி.மீ. எல்லை இடப்பட்டுள்ளன..**<br>• **வனப் பாதுகாப்புப் பிரதேசங்களில் 127 பெயர் பதாகைகள் தாபிக்கப்பட்டு அவ் வேலைகள் பூர்த்தியடைந்துள்ளதன.**<br>• **09 பெயர் பதாதைகள் மறுசீரமைக்கப்பட்டு வருகின்றன** |
| 2. | **சுற்றாடல் சுற்றுலா விடய அபிவிருத்தி**<br>**மின்னேரியா தேசிய பூங்கா**<br><br>**மின்னேரியா தேசிய வனப்பூங்கா**<br><br>**எங்கல்ஓயா வனசீவராசி சுற்றுலா பங்களா** | 10.00 | 10.58 | • சுண்டிக்குளம் வனசீவராசிகள் சுற்றுலா பங்களாவிற்கான தளபாடங்களின் கொள்வனவு வேலைகள் நிறைவடைந்துள்ளன.<br>• 06 வனசீவராசிகள் சுற்றுலா பங்களாக்கள், குமன வில்லுவில பார்வையிடல் கோபுரம் ஒன்றை நிர்மாணித்தல் மற்றும் 02 சுற்றுலா நிலையங்களின் வசதிளை விரிவாக்கல் மற்றும் குமன தேசிய வனப்பூங்காவில் ஆமைகளின் பாதுகாப்பு நிலைய நிர்மாணிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.<br>• இணையத்தளத்தினூடாக வன சீவராசிகள் சுற்றுலா பங்களாக்களை ஒதுக்கிக் கொள்ளும் செயற்திட்டம் மெற்கொள்ளப்பட்டு வருகின்றது. |

| தொடர் இல. | நிகழ்ச்சித்திட்டங்கள் | நிதி (ரூ.மில்.) | நிதி முன்னேற்றம் (ரூ.மில்.) | பௌதீக முன்னேற்றம் |
|---|---|---|---|---|
| 3. | மக்கள் விழிப்பூட்டல் நிகழ்ச்சித்திட்டம்  உயிரியல் வேலி  பெண்கள் சக்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் கைப்பணிப் பொருட்கள் | 1.50 | 1.15 | • வனப் பாதுகாப்புப் பிரதேசங் களை அண்டி வாழ்கின்ற மக்களின் ஒத்துழைப்புடன் 02 சிரமதான நிகழ்ச்சித் திட்டங் கள், சனசமூக நிலையங்களின் 03 முன்னேற்ற மீளாய்வு நிகழ்ச்சித் திட்டங்கள், 03 சுய தொழில் முன்னேற்ற நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் பெண்கள் சக்தி கண்காட்சி நிகழ்ச்சித் திட்டம் என்பன வெற்றிகரமாக நடந்தேறியுள்ளன.<br>• குமன தேசிய பூங்காவில் மக் களின் பங்களிப்புடன் 3000 கடலானை செடிகளின் நடுகை முடிவடைந்து உள்ளதுடன், வனப் பாதுகாப்புப் பிரதேசத்தை அண்டி வாழ்கின்ற மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம் படுத்துவதற்கு 02 தொழிற் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன.<br>• கிராமிய மக்களின் ஒத்தழைப் புடன் உயிரியல் வேலி அமைப்பு மற்றும் பேணல் 04 நிகழ்ச்சித் திட்டங்கள் மேற் கொள்ளப்பட்டு 11 கி.மீ. வரை வேலை நடைபெற்றுள்ளன.<br>• கவுடுல்ல விவசாயக் கிணறு கட்டி முடிக்கப்பட்டுள்ளது. கோனகம்ஆற நுண் திட்டம் மூலம் இனங் காணப்பட்ட செயற்திட்டமான 'பிம்மல்' செய்கை வெற்றிகரமாக முடுவுறுத்தப்பட்டுள்ளது.<br>• வில்பத்து \ எலபத்கம கிராமத் தின் நுண் திட்டம் தயாரித்து முடிக்கப்பட்டுள்ளது |

| தொடர் இல. | நிகழ்ச்சித்திட்டங்கள் | நிதி (ரூ.மில்.) | நிதி முன்னேற்றம் (ரூ.மில்.) | பௌதீக முன்னேற்றம் |
|---|---|---|---|---|
| 4. | அச்சுறுத்தலுக்காளான வன சீவராசிகளின் பாதுகாப்பு<br>வனசீவராசிகளுக்கு சிகிச்சையளித்தல்<br><br> | 2.50 | 2.39 | • அநாதையான மற்றும் பல்வேறு விபத்துக்காளால் பாதிக்கப்பட்ட கால்நடைகளுக்கு சிகிச்சை அளித் தல் மற்றும் அவற்றை இயற்கைச் சுற்றாட லுக்கு விடுவிக்கும் வரை தடுத்து வைத் திருத்தல் தொடர்பாக பல்வேறு அளவுகளிலான 20 விலங்குக் கூடுகள் தயாரிக்கப் பட்டுள்ளன.<br>• ஹொரகல்ல தேசிய பூங்காவில் நோய் வாய்ப்பட்ட கால்நடைகளுக்கு சிகிச்சை அளிப்பதற்காக கால்நடை கொட்டகை ஒன்று அமைக்கப்பட்டு உள்ளது.<br>•மிருகங்களைப் பிடிப்பதற்கான கருவிகள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன.<br>• உடவளவை யனைகள் 'அத்துரு செவன" மணல்மேடு அமைத்தல் |
| 5. | தகவல்தொழிநுட்ப முறைமையை<br><br> | 4.00 | 3.15 | • தலைமை அலுவலகம் மற்றும் கள அலுவலகங்களின் தொலை பேசிகளுக்காக 60 பற்றரிகள் கொள்வனவு செய்யப்பட்டன<br>• தேசிய வனப்பூங்காக்களில் நுழைவுச் சீட்டு விநியோகத்தைக் கணனிமயப் படுத்தும் பணிகளும், திணைக்களத் தின் கணனி வலையமைப்பு மற்றும் வானொலித் தொடர்பாடல் வலை யமைப்பு ஆகிய வற்றின் பராமரிப்புப் பணிகள் மற்றும் மேம்பாட்டுப் பணிக ளின் கீழ் 100 கணனிகளின் வைரஸ் மென்பொருட்கள், அவற்றின் உதிரிப் பாகங்கள், புதிய 10 கணனிகள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன. |
| 6. | வீதி முறைமையை<br> | 20.00 | 13.59 | • குமண, மற்றும் உடவளவை ஆகிய தேசிய பூங்காக்களின் 15 கி.மீ நீள மான வீதிகள் மேம்படுத்தப்பட்டுள்ள துடன், தேசிய பூங்காக்களில் 80 கி.மீ வரை நீண்ட வீதி முறைமைகள் மேம்படுத்தப்பட்டுள்ளன.<br>• வஸ்கமுவ மற்றும் வில்பத்து ஆகிய தேசிய பூங்காக்களில் 5 கி.மீ நீள மான வீதிகள் புதிதாக நிர்மாணிக்கப் பட்டு வருகின்றன. |

| தொடர் இல. | நிகழ்ச்சித்திட்டங்கள் | நிதி (ரூ.மில்.) | நிதி முன்னேற்றம் (ரூ.மில்.) | பௌதீக முன்னேற்றம் |
|---|---|---|---|---|
| **7.** | **நீர்த்தேக்கங்கள் மற்றும் நீர்க்குழிகளை மறுசீரமைத்தல்**<br><br> | **2.00** | **6.52** | • வில்பத்து தேசிய சரணாலயத் தின் 01 குளம் புனரமைக்கப்பட்டுள்ளதுன் ஏனைய ஒதுக்கிடங்களில் 19 குளங்கள் புனரமைக்கப்பட்டுள்ளன.<br>• 09 குளங்கள் மற்றும் 15 நீர்க் குழிகள் அமைக்கப்பட்டுள்ளன. |
| **8.** | **கட்டிட திருத்தப் பணிகள்**<br><br>வவுனியா வன சீவராசிகள் நிர்வாகக் கட்டிடம் நிர்மாணிப்பு | **25.33** | **20.93** | •வனப் பாதுகாப்புப் பிரதேசங் களின் நிருவாகக் கட்டிடங்கள் மற்றும் உத்தியோகபூர்வ இல்லங்கள் அடங்கலாக 31 கட்டிடங்களின் மறுசீரமைப்பு ப0ணிகள் பூர்த்தி செய்யப்பட்டு உள்ளன.<br>• நீர் விநியோக முறைமை ஒன்று தாபிக்கப்பட்டுள்ளது. |
| **9.** | தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்களின் கொள்வனவு<br><br>வனசீவராசிகள் சுற்றுலா விடுதிக்கான தளபாடங்களின் | **5.64** | **5.64** | • பிரதான அலுவலகத்துக்கும் கள அலுவலகத்துக்கும் 01 மேசை, 10 கணனிகள், 05 நிதி கணக்கீட்டு உபகரணங்கள், 04 குளிரூட்டிகள், 02 நிழற்பிரதி இயந்திரங்கள், 01 தொலைக்காட்சி மற்றும் 03 மல்ட்டி மீடியா ப்ரொஜெக்டர் ஆகியன கொள்வனவு செய்யப்பட்டன.<br>• எழுதுநர்கள் தொடர்பாக அவசியமான மேசை, அலுமாரி உட்பட ஏனைய தேவையான பொருட்களை கொள்வனவு செய்தல் |

| தொடர் இல. | நிகழ்ச்சித்திட்டங்கள் | நிதி (ரூ.மில்.) | நிதி முன்னேற்றம் (ரூ.மில்.) | பௌதீக முன்னேற்றம் |
|---|---|---|---|---|
| **10.** | **வதிவிட மேம்பாடு**<br><br>லுணுகம்வெஹர தேசிய வனப் பூங்காவின் வதிவிட மேம்பாடு | **35.00** | **30.06** | • உடவளவை தேசிய பூங்காவின் வதிவிட மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் முறையே அதிகனதியான லென்டானா 84 மற்றும் 77 ஹெக். காணிகளை ஆக்கிரமித்து வளரும் தாவரங்கள் அகற்றப்பட்டன. மேலும் அப் பூங்காக்களில் முறையே 38 மற்றும் 27 ஹெக். பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.<br>• யால தேசிய பூங்காவில் 89 ஹெக்ரயார் காணியில் புற்தரை பேணல் பணிகள் மேற்கொள்ளப் படுகின்றன.<br>• 08 வாவிகள் புனரமைப்பு வேலைகள் முடிவுறுத்தப்பட்டு உள்ளதுடன் 02 வாவிகளின் புனரமைப்பு வேலைகள் இடம் பெறுகின்றன. மேலும் 20 சிறு நீர்க்குழிகள் ( வில்பத்து. டெல்ப் தீவு, குடம்பிகல) புனரமைக்கப் பட்டு உள்ளன.<br>• தீ முகமைத்துவத்தின் மூலம் வில்பத்து தே.வ.பூ. 100 ஹெக். பரப்பில் புற்தரை பேணல் மற்றும் 525 ஹெக். பரப்பில் புற்தரை சுத்தப்படுத்தல் வேலைகள் மேற்கொள்ளப்பட்டன.<br>• 30 கி.மீ. தீப்பட்டிகள் வெட்டப்பட்டன. |
| **11.** | **இயந்திரப் பொறித்தொகுதி கொள்வனவு** | **4.1** | **2.78** | • குமன தேசிய பூங்காவுக்கு 01 சூரிய வலு முறைமை, கல்ஓயா, வஸ்கமுவை தேசிய பூங்காக்களுக்கு 02 தண்ணீர் மோட்டார்கள் கொள்வனவு செய்யப்பட்டன.<br>• கற்பிட்டி சமுத்திரப் பூங்காவுக்கு படகொன்று கொள்வனவு செய்யப் பட்டது. |

| தொடர் இல. | நிகழ்ச்சித்திட்டங்கள் | நிதி (ரூ.மில்.) | நிதி முன்னேற்றம் (ரூ.மில்) | பௌதீக முன்னேற்றம் |
|---|---|---|---|---|
| 12. | **பயிற்சி மற்றும் ஆய்வு**<br><br><br>ஆயுத பயிற்சி பாடநெறி மகாஓயா பொலிஸ் | 1.30 | 0.62 | • வனசீவராசிகள் அலுவலர்கள் தொடர்பான GPS தொழிநுட்பம், வண்ணாத்திப் பூச்சிகளை இனங்காணல் தொடர்பான 01 செயலமர்வு, நன்னீர் மீன்களை இனங்காணல் பற்றிய 01 செயலமர்வு, எண்ணக்கரு விருத்தி தொடர்பாக 01 பயிற்சிப் பட்டறை ஆகியன நடாத்தப்பட்டுள்ளன.<br>• பங்களா பொறுப்பாளர்கள் தொடர்பாக பயிற்சி பட்டறைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.<br>• 04 ஆராய்ச்சிக் குழுக்கள் பயிற்று விக்கப்பட்டுள்ளதுடன், திணைக்களத்தினால் 10 ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.<br>• காட்டு யனை மனிதன் மோதல்களை குறைப்பதற்கான தேசிய திட்டம் தயாரிக்கப் பட்டு நிறைவு செய்யப்பட்டுள்ளது. |
| 13. | **பாதுகாப்புக் கற்கை தொடர்பான நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்தல்** | 4.70 | 4.07 | • உலக சுற்றாடல் தினம், பல்லுயிரினங்களின் தினம், ஈரலிப்பு நிலங்கள் தினம் முதலிய கொண்டாட் டங்கள் தொடர்பான 10 விழிப்பூட்டல் நிகழ்ச்சித் திட்டங்கள் வனசீரவராசி வலயங்களில் நடாத்தப்பட்டுள்ளன.<br>• பொசான் மற்றும் எசல வைபவங்கள் தொடர்பாக 04 விழிப்பூட்டல் நிகழ்ச்சி திட்டங்கள் நடாத்தப் பட்டுள்ளன.<br>• பாடசாலை மாணவர்கள், அரசாங்க ஊழியர்கள் தொடர்பான 77 விழிப்பூட்டும் நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் 15 கண்காட்சிகளும் நடாத்தப்பட்டுள்ளன.<br>• 'யாத்ரா' நிகழ்ச்சித்திட்டத்திற்கு இணையாக சிரமதான வேலைத்திட்டம் ஒன்று ஆகஸ்ட் மற்றும் மாதங்களில் மேற்கொள்ளப்பட்டு உள்ளன.<br>• 'வனாந்தரே கதந்தரே' எனும் 40 நிகழ்ச்சித்திட்டங்கள் வானொலிக் கூட்டுத்தாபனத்தின் மூலம் ஒலிபரப்ப பட்டது. வனசீவராசி வளங்கள் அமைச்சினால் வெளியிடப்படும் "வனதிவி செரிய' என்ற இணைப்பிதழை பிரசுரிப்பதற்கு ஒத்துழைப்பு வழங்கப்பட்டது.<br>• 2012 'வனசீவி' சஞ்சிகையின் 2.000 பிரதிகள் அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளது.<br>• ஈரலிப்பு நிலங்கள் தினம், பல்லுயிரினங்களின் தினம் மற்றும் காட்டு யானைகள் கிராமங்களுக்குள் நுழைவதை தடுப்பது தொடர்பாக நிர்மாணிக்கப் பட்ட மின்வேலி ஆகியன சம்பந்தமாக 03 சுருக்கக்கூற்று அறிக்கைகள் தயாரிக்கப்பட்டன. |

| தொடர் இல. | நிகழ்ச்சித்திட்டங்கள் | நிதி (ரூ.மில்.) | நிதி முன் னேற்ற ம் (ரூ.மில்) | பௌதீக முன்னேற்றம் |
|---|---|---|---|---|
| **14.** | **பாதுகாப்பையும் சட்டத்தை யும் நிலைநாட்டுதல்**<br>வனசீவராசிகள் அலுவலர்கள் பாதுகாப்புக் கடமையில்<br><br> | **5.00** | **3.90** | • 5,000 துப்பாக்கி ரவைகளின் கொள்வனவு மற்றும் கடல்வாழ் உயிரினங்கள் பற்றிய வர்த்தமானி அறிவித்தல் ( 750 பிரதிகள்) 03 மொழிகளிலும் அச்சிடல் பணிகள் நிறைவடைந்துள்ளன.<br>• துப்பாக்கி பயன்படுத்தல் பற்றிய 01 நிகழ்ச்சித் திட்டமும், வனசீவராசி கள் சட்டம் பற்றிய 01 விழிப் புணர்வூட்டல் நிகழ்ச்சித் திட்டமும் நடாத்தப்பட்டுள்ளன.<br>• GPS மற்றும் செய்மதிப்புகைப்படப் பாவனை ஆகியவற்றின் மூலம் சட்டங்களைச் செயற்படுத்துவது தொடர்பில் திணைக்களத்தின் 50 அலுவலர்களுக்கு 02 விழிப் புணர்வூட்டல் செயலமர்வுகள் நடாத்தப்பட்டன. |
| **15.** | **தேசிய வன சீவராசிகள் ஆராய்ச்சி மற்றும் பயிற் சிக் கேந்திர நிலையங் களைப் பராமரித்தல்**<br><br>தேசிய வன சீவராசிகள் ஆராய்ச்சி மற்றும் பயிற்சிக் கேந்திர நிலையம்–கிரித்தலை | **9.00** | **11.16** | • வன சீவராசிகள் பாதுகாப்பு உத்தி யோகத்தர்களின் ஆற்றல் விருத்தி யிற்காக வனசீவராசிகள் முகாமைத் துவம் பற்றிய 02 சிரேஷ்ட மற்றும் கனிஷ்டச் சான்றிதழ் பாட நெறிகள் கிரித்தலை தேசிய வன சீவராசிகள் தொடர்பான பயிற்சி ஆராய்ச்சிக் கேந்திர நிலையத்தில் நடாத்தப்பட்டன.<br>• அரசாங்க ஊழியர்கள் மற்றும் திணைக்கள அலுவலர்கள் ஆகியோரை விழிப்பூட்டும் 08 குறுங்கால நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டன. |
| **16.** | **வாகனங்களின் திருத்தப்பணிகள்** | **7.50** | **5.13** | • திணைக்களத்தினதும் களஅலுவல கங்களினதும் 19 வாகனங்களின் திருத்துதல் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன், KA –0593 டிப்பர் வண்டியும் திருத்தப்பட்டு உள்ளன. |

**வனசீவராசிகள் பாதுகாப்பு நிதியம்**

வன விலங்குகள் மற்றும் தாவரங்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் கீழ் இந்த வனசீவராசிகள் பாதுகாப்பு நிதியம் தாபிக்கப்பட்டுள்ளது. வனசீவராசிகள் பாதுகாப்பு விடயங்களிலிருந்து கிடைக்கின்ற வருமானத்தின் ஒரு பகுதியை வனசீவராசிகள் பாதுகாப்பு விடயங்களுக்குப் பயன்படுத்துவது இந்த நிதியத்தின் குறிக்கோளாகும். சுற்றுலா விடயங்களிலிருந்து கிடைக்கின்ற வருமானத்தின் ஒரு பகுதி, வனசீவராசிகள் குற்றங்களுக்கு எதிராக அறவிடப்படும் தண்டப் பணங்கள், திணைக்களத்தினால் வழங்கப்படும் ஏனைய சேவைகளிலிருந்து கிடைக்கின்ற வருமானம் மற்றும் நன்கொடைகள் என்பன இந் நிதியத்தில் அடங்கும்.

**வனசீவராசிகள் பாதுகாப்பு நிதியத்தின் முன்னேற்றம் (2013.12.31ஆம் திகதிக்கு )**

| நிதி மூலம் | மதிப்பீடு (ரூ.மில்.) | செலவு (ரூ.மில்.) | (%) |
|---|---|---|---|
| வனசீவராசிகள் பாதுகாப்பு நிதியம் | 799.40 | 412.00 | 51 |

**வன சீவராசிகள் பாதுகாப்பு நிதியத்தின் வருமானம் (2013.12.31ஆம் திகதிக்கு)**

| மாதம் | வருமானம் (ரூ.மில்.) |
|---|---|
| சனவரி | 78.43 |
| பெப்ருவரி | 91.00 |
| மார்ச் | 81.88 |
| ஏப்ரல் | 57.53 |
| மே | 32.11 |
| யூன் | 32.94 |
| யூலை | 86.15 |
| ஆகஸ்ட் | 138.79 |
| செபரெம்பர் | 60.31 |
| ஒக்ரோபர் | 70.07 |
| நவம்பர் | 77.96 |
| டிசம்பர் | 108.77 |
| **மொத்தம்** | **915.94** |

**தேசிய பூங்காக்களுக்கான சுற்றுலாப் பயணிகளின் வருகை (2013.12.31 ஆம் திகதிக்கு)**

| தேசிய பூங்கா | உள்நாட்டு | வெளிநாட்டு |
|---|---|---|
| யால | 236,700 | 142,714 |
| ஹோட்டதென்ன | 170,966 | 48,827 |
| உடவளவை | 70,927 | 41,487 |
| வஸ்கமுவ | 20,402 | 934 |
| மின்னேரிய | 46,511 | 34,065 |
| புந்தள | 9,124 | 6,947 |
| ஹொரகொல்ல | 6,737 | 9 |
| கவுதுல்ல | 20,539 | 15,775 |
| லுணுகம்வெஹர | 4,101 | 740 |
| கல்ஒயா | 2,626 | 165 |
| குமண | 14,027 | 3,105 |
| அங்கம்மெடில்ல | 1,358 | 0 |
| கல்வேஸ்லேண்ட் | 1,730 | 154 |
| வில்பத்து | 37,705 | 8,846 |
| மாதுருஒயா | 1,084 | 29 |
| லாஹுகல | 243 | 59 |
| பறவைத் தீவு | 38,978 | 12,886 |
| ஹிக்கடுவை | 26,817 | 5,968 |
| உடவளவை அத் அத்துருசெவன | 125,588 | 16,074 |
| வெலிபர அபயபூமி | 8,494 | 2,443 |
| **மொத்தம்** | **844,657** | **341,227** |

# முழுமொத்த நிதி முன்னேற்றம் (2013.12.31 ஆம் திகதிக்கு)

| செலவினத் தொகுதி | மதிப்பீடு (ரூ.மில்.) | செலவு (ரூ.மில்.) | நிதி முன்னேற்றம் |
|---|---|---|---|
| மூலதனச் செலவு | 642.9 | 469.74 | 73 |
| மீண்டெழும் செலவு | 531.6 | 527.08 | 99 |
| மொத்தம் | **1,174.5** | **996.82** | **85** |

| தொடர் இல. | நிகழ்ச்சித்திட்டம் | ஒதுக்கீடு (ரூ. மில்.) | முன்னேற்றம் நிதி (ரூ. மில். ) |
|---|---|---|---|
| 1 | வனப்பாதுகாப்பு பிரதேச வலையமைப்பை நிறுவுதல் | 5.00 | 4.98 |
| 2 | சுற்றாடல் சுற்றுலாத்துறை அபிவிருத்தி | 10.00 | 10.58 |
| 3 | மக்கள் விழிப்புணர்வு பணிகளின் அபிவிருத்தி | 1.50 | 1.15 |
| 4 | அச்சுறுத்தலுக்காளான சீவராசிகளின் விசேட பாதுகாப்பு | 2.50 | 2.39 |
| 5 | தகவல் தொடர்பாடல் முறைமை மேம்பாடு | 4.00 | 3.15 |
| 6 | வனப்பாதுகாப்பு பிரதேச வீதி முறைமைகளை மறுசீரமைத்தலும், அபிவிருத்தி செய்தலும் | 20.00 | 13.59 |
| 7 | வனப்பாதுகாப்பு பிரதேசங்களின் நீர்மூலங்களை மேம்படுத்தல் | 2.00 | 6.52 |
| 8 | கட்டிட மற்றும் நிர்மாணிப்பு மறுசீரமைப்பு | 25.33 | 20.93 |
| 9 | மின்வேலி நிர்மாணிப்பு | 100.32 | 110.91 |
| 10 | வனப்பாதுகாப்பு பிரதேசங்களின் வதிவிட மேம்பாடு | 35.00 | 30.06 |
| 11 | தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்களை கொள்வனவு செய்தல் | 5.64 | 5.64 |
| 12 | இயந்திரப்பொறித் தொகுதி கொள்வனவு | 4.1 | 2.78 |
| 13 | வாகனங்களின் திருத்த வேலைகள் | 7.50 | 5.13 |
| 14 | பயிற்சி மற்றும் ஆராய்ச்சி | 1.30 | 0.62 |
| 15 | பாதுகாப்பு கற்கை மற்றும் விவரணம் | 4.70 | 4.07 |
| 16 | பாதுகாப்பு மற்றும் சட்ட அமுலாக்கம் | 5.00 | 3.90 |
| 17 | தேசிய வனசீவராசிகள் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி கேந்திர நிலையங்களைப் பேணல் | 9.00 | 11.16 |
| 18 | ஹொரவபொத்தான காட்டு யானை பாதுகாப்பு வனப்பூங்கா தாபித்தல் | 300.00 | 133.86 |
| 19 | தெயட்ட கிருல அபிவிருத்தி வேலைத்திட்டம் | 100.00 | 98.32 |
| **மொத்தம்** | | **642.9** | **469.74** |

# இலங்கை வனசீவராசிகள் பொறுப்பு

# இலங்கை வனசீவராசிகள் பொறுப்பு

## நோக்கங்கள்

- இலங்கையின் இயற்கை மரபுரிமைகள், சுற்றாடல் மற்றும் பொருளாதாரப் பெறுமானங்களை பாதுகாத்தலும் விருத்தி செய்தலும்
- வனசீவராசிகள் மற்றும் சுற்றாடல் கற்கைகள் பற்றி பிரபல்யப்படுத்தல்
- இலங்கையின் வனசீவராசிகள் பாதுகாப்பு பணிகள் தொடர்பாக ஒத்துழைப்பு வழங்கல்
- வனசீவராசிகள் / சுற்றாடல் சட்டங்ளை பிரபல்யப்படுத்தல்
- சுற்றாடல் சுற்றுலா வசதிகளையும் தொடர்பாடல் பணிகளையும் பேணல் மற்றும் ஒழுங்கமைத்தல்
- இலங்கையின் இயற்கை மற்றும் கலாசார பெறுமானங்கள் பற்றி தேசிய மற்றும் சர்வதேச ரீதியான புரிந்துணர்வை மேம்படுத்தல்

## நிர்வாகம்

இலங்கை வனசீவராசிகள் பொறுப்பின் நிர்வாகப் பணிகளில் 10 உறுப்பினர்கள் பணிபுரிகின்றனர். அதாவது வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் உத்தியோகபூர்வமாக தலைவராகவும், வனசீவராசிகள் துறைசார் அமைச்சின் செயலாளர், வன பரிபாலன பாதுகாப்பு நாயகம், நிதி அமைச்சின் பிரதிநிதி, இலங்கை சுற்றுலாச் சபை பிரதிநிதி, மத்திய சுற்றாடல் அதிகார சபையின் பிரதிநிதி, அரச சார்பற்ற நிறுவனங்களின் இரண்டு பிரதிநிதிகள் மற்றும் தனியார் வர்த்தக துறையின் இருவர் ஆகியோர் உள்ளடங்குவர்.

### வனசீவராசிகள் பொறுப்பு நிதியத்தின் வருமானம்

வனசீவராசிகள் பொறுப்பு நிதியத்தின் அனைத்து பணிகளுக்கும் வருமானம் ஈட்டவேண்டியுள்ளது. அதற்கான 04 வழிமுறைகள் கீழே காணப்படுகின்றன.

- நிதி முதலீடு
- ரன்தெனிகல பயிற்சி நிலையத்தை வாடகைக்கு விடல்
- சுற்றாடல் சுற்றுலா அலுவல்கள்
- விற்பனை நடவடிக்கைகள் (தொடர்பாடல் பொருட்கள் ஆகியன)

பாதுகாப்பு சேவைகளை விருத்தி செய்வதன் மூலம் வனசீவராசிகள் பொறுப்பின் ஆண்டுக்கான வருமான அதிகரிப்புக்கு அது வழிவகுக்கின்றது.

## இலங்கை வனசீவராசிகள் பொறுப்பின் நிகழ்ச்சித்திட்டங்களும் சேவைகளும்

வனசீவராசிகள் பொறுப்பு தனது வருமானத்திலிருந்து 50% ஐ பல்வேறு பாதுகாப்பு சேவைகளை மேற்கொள்ளும் பொருட்டு செலவிடுகின்றது.

- **சமுதாயக் கல்வி நிகழ்ச்சித்திட்டங்கள்**

  நடமாடும் விழிப்பூட்டல் நிகழ்ச்சித்திட்டங்கள், செயலரங்குகள், ஆய்வுச் சுற்றுலாக்கள், ஒரு நாள் விழிப்புணர்வூட்டல் செயலமர்வு, இரு நாள் வதிவிடக் ஆய்வுச் சுற்றுலா மற்றும் ஆறு மாத வனசீவராசிகள் பாதுகாப்புச் சான்றிதழ் பாடநெறி என்பன இந்த நிகழ்ச்சித்திட்டங்களில் அடங்கும். இது தவிர பல விழிப்பூட்டல் நிகழ்ச்சித்திட்டங்களும் வனசீவராசிகள் பொறுப்பினால் ஒழுங்கு செய்யப்படுகின்றன.

- **பாடசாலைக் கல்வி நிகழ்ச்சித்திட்டங்களும் சுற்றாடல் விடயங்களும்**

  இந்த நிகழ்ச்சித்திட்டம் வனசீவராசிகள் பொறுப்பு நிதியத்தின் ஒரு முதன்மை நிகழ்ச்சித்திட்டமாகும். மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த பல்லுயிரினத் தன்மை சார்ந்த விழுமியங்களையுடைய வனசீவராசிகள் பாதுகாப்பு வலயத்தை அண்மித்த பாடசாலைகள் தொடர்பில் இதன் கீழ் முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளது. வனசீவராசிகள் பாதுகாப்பு வலயத்தை அண்மித்திருக்கின்ற பாடசாலைகளின் செயற்பாடுகளை ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் ஆகியோரை இணைத்துக்கொண்டு அவர்களின் பிரதான ஒத்துழைப்பு மற்றும் திட்டமிடல் ஆகியவற்றின் கீழ் குறுங்காலச் செயற்பாடுகளின் மூலம் கற்கைத் திட்டங்களினூடாக இந்த நிகழ்ச்சித்திட்டங்கள் ஒழுங்கு செய்யப்படுகின்றன.

- **சமுதாய அமைப்புகளின் வலிமைகளை மேம்படச் செய்தல்**

  வனசீவராசிகள் பாதுகாப்பு வலயத்தினுள் உள்ள மக்களினதும் அதனை அண்மித்த பகுதி மக்களினதும் அபிவிருத்திச் செயற்பாடுகளை நோக்கமாகக் கொண்ட சமூகமய நடவடிக்கைகளை மேம்படச் செய்வது இந்தச் செயற்பாடுகளில் அடங்கும்.

- **ஆராய்ச்சி நடவடிக்கைகள்**

  இதன் கீழ் உரிய துறைகளினுள் பல மட்டங்களிலும் ஆராய்ச்சி நடவடிக்கைகளுக்கு உதவுதல். குறிப்பாக பல்கலைக்கழக மட்டத்தில் பட்டதாரி மாணவர்கள், பட்டப்பின்படிப்பு மாணவர்கள் ஆகியோருக்கு ஆராய்ச்சி நடவடிக்கைகள் தொடர்பிலும் மற்றும் உயர் தர மாணவர்களுக்கு கருத்திட்டச் செயற்பாடுகள் தொடர்பிலும் உதவுதல்.

- **தொடர்பாடல் மற்றும் செய்திப் பிரிவின் கருத்திட்டங்கள்**

  வனசீவராசிகள் பொறுப்பின் விற்பனை நிலையங்களின் வெளியீட்டுப் பணியகம், வெளியீட்டுப் பிரிவு ஆகியவற்றுடன் சம்பந்தப்பட்ட பணியகங்கள் இவற்றில் அடங்கும். தற்பொழுது இந்த வனசீவராசிகள் பொறுப்பினால் 7 தகவல் தொடர்பாடல் மற்றும் விற்பனை நிலையங்கள் மிகவும் வெற்றிகரமான முறையில் நிருவகிக்கப்பட்டு வருகின்றன.

## 2013.12.31 ஆந் திகதிக்கு வருமானம்

| மாதம் | வருமானம் (ரூ.மில்.) | செலவு (ரூ.மில்.) |
|---|---|---|
| சனவரி | 1,044,959.63 | 869,349.21 |
| பெப்ருவரி | 1,183,661.75 | 836,609.71 |
| மார்ச் | 782,229.00 | 1,081,885.30 |
| ஏப்ரல் | 1,008,655.63 | 936,249.49 |
| மே | 888,346.25 | 937,180.71 |
| யூன் | 742,417.13 | 750,174.15 |
| யூலை | 1,399,897.75 | 903,035.41 |
| ஆகஸ்ட் | 1,190,237.25 | 1,011,528.99 |
| செப்ரெம்பர் | 1,932,810.25 | 690,875.47 |
| ஒக்ரோபர் | 1,205,754.00 | 1,382,496.76 |
| நவம்பர் | 1,828,396.08 | 849,875.15 |
| டிசம்பர் | 927,473.20 | 2,235,588.39 |
| **மொத்தம்** | **14,134,837.92** | **12,484,848.74** |